www.padippakam.com

# பாலம்

1999 - 1



விண்வெளியில்
ஆய்வு நிலையம்



டயானா
வஞ்சித்தாரா?
வஞ்சிக்கப்பட்டாரா?



லேசர் தொலைக்காட்சி

படிப்பகம்

www.padippakam.com

சுவிஸ் சூரிச் மாநகரில் உங்களை அன்புடன் வரவேற்கின்றது

# தமிழரசி நகைமாடம்

- பதக்கம்
- காப்பு
- சங்கிலி
- தாலிக்கொடி
- ராசிக்கல் மோதிரம்
- முத்துச் சங்கிலி
- நவரத்தின மோதிரம்



அழகிற்கு அழகு சேர்ப்பது
தமிழரசியின்
தங்க நகைகளே

அழகிற்கும் முதலீட்டிற்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
தமிழரசி நகைமாடம்

அசல் 22 கரட்
தங்க நகைகளில் 916
என முத்திரை இருக்கும்.

**NEUGASSE 58, 8005 ZURICH**

Tel: 01/440 6050, Fax: 01/440 60 52

படிப்பகம்

www.padippakam.com




# பாலம்

சமூக-அரசியல்-கலை-
இலக்கிய மாத சஞ்சிகை

**PAALAM**

Tamil Monthly Magazine




தொடர்புகட்கு:

PAALAM PUBLICATIONS
Sønder Parken 10.st.tv
7430 Ikast
Denmark.
Fax: + 45 97 25 22 96



அச்சுப் பதிப்பு
**வாசன் அச்சகம்**
லண்டன்
+ 44 181 646 2885


## ஆதரவு அவசியம்

பூமியில் நாம் காணும் ஒவ்வொரு படைப்பிற்கும் ஒவ்வோர் செயற்பாடுண்டு. அதற்கேற்ப அவற்றிற்குரிய ஒவ்வொரு அங்கமும் உருவாகியுள்ளது. படைப்பில் மேலதிகமோ அல்லது பற்றாக்குறையோ ஏற்பட்டால் அதைக் குறைபாடு என்கிறார்கள். கலை இலக்கியத்திற்கும் இது பொருந்தும். கவிதையின் எல்லா உறுப்புக்களும் இயற்கையாகப் பொருந்திவர வேண்டிய சமநிலைய்ய சங்கப்பாடல்களே வலியுறுத்தியுள்ளன. இதனால்தான் சிறப்புப்பெற்ற அப்பாடல்களை உறுப்பாக்கவியற் கொள்கை சார்ந்தது எனக் கூறுகிறது திறனாய்வு.

ஐரோப்பாவில் நமது மக்கள் திருப்பியனுப்பப்படும் மிகவும் சிக்கலான நிலையிலுள்ளனர். பலர் நிரந்தர வதிவுடமை பெற்றிருந்தாலும் ஒரு சிலர் திருப்பி அனுப்பப்படும் நிலையிலுள்ளனர். ஐரோப்பாவில் தமிழர்கள் திருப்பியனுப்பப்படும் கொடிய அபாயம், தமிழீழத்தில் நிலவும் பெரும் உணவு நெருக்கடி, மனித உரிமை மீறல்கள், உலக அரசுகள் இடிந்து கரைய அந்த இடத்திற்கு பங்குச் சந்தைகள் கொலுவேறும் நூற்றாண்டின் முடிவின் சர்வதேச ஒழுங்கென எண்ணற்ற விடயங்களிருக்க பாலம் சஞ்சிகை ஒவ்வொன்றையும் தனது வெளியீட்டில் ஏதாவது ஒரு வழியில் வெளிக்கொண்டு வருகிறது. இன்னும் நிறைய விடயங்கள் மக்களைச் சென்றடையவேண்டியுள்ளது. மக்களிடமிருந்தும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகிறது. பலதரப்பட்ட விடயங்களையும் தாங்கிவரவேண்டிய சஞ்சிகை என்பதால் வாசகர்களிடமிருந்து ஆலோசனைகள், அபிப்பிராயங்களை வேண்டி நிற்கிறோம்.

ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com



www.padippakam.com



# உள்ளே...



விடுதலை ஆண்டு 1999
—மாதபலன்
பக்கம்—04

லேசர் தொலைக்காட்சி
பக்கம்—22





டயானா வஞ்சித்தாரா? வஞ்சிக்கப்பட்டாரா?
பக்கம்—24

இலக்கிய மேதை
பக்கம்—34





விண்வெளியில் ஆய்வு நிலையம்
பக்கம்—42

உழைப்பால் உயர்ந்தவர்
பக்கம்—46



| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கடலுக்கடியில் பழைய கப்பல்கள் | 07 | சரித்திரம் மறுபிறவி எடுக்கும் | 19 |
| புத்தகம் படிப்பது எப்படி? | 09 | விளையாட்டு | 27 |
| என்றும் பதினாறு | 10 | கலையும் மக்களும் | 30 |
| தேடலும் தெளிவும் | 14 | சிறுகதை | 32 |
| உலக ஆசிரியர் மாநாடு | 16 | | |



படிப்பகம்

www.padippakam.com



# விடுதலை நூற்றாண்டு



## இருபத்தியோராம் நூற்றாண்டை இரு தேசங்களும் இருவிதமான மனோநிலையுடன் எதிர்கொள்ளுகின்றன



1999–ம் ஆண்டு பிறந்திருக்கின்றது. 21–ம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்க உலகம் தன்னை தயார்படுத்தும் முயற்சியில் தீவிரம்கொண்டு நிற்கின்றது. விடுதலைப் போராட்டத்தின் வீரியமிகு காலப்பதிவுகளைச் சுமந்தபடி கடந்த ஆண்டுகள் பெருமையுடன் கடந்துசெல்ல விடுதலை அவாவியபடி, புதிய நூற்றாண்டை தமிழீழ விடுதலைப் போராட்டமும் எதிர்கொண்டு நிற்கின்றது.

விஞ்ஞான உலகத்தின் வளர்ச்சிப்போக்கிற்கு ஏற்றவகையில், இன அழிப்புக் கொள்கையை தம் பிரதான கொள்கையாக வரித்துக் கொண்ட சிங்கள ஆளும் வர்க்கமும் தன் அழிப்புக்கொள்கையை நவீனப்படுத்தி, தன் போக்கில் முற்றேற்றம் கண்டிருக்கின்றது. அந்தக் கொடிய அனுபவத்தை எதிர்கொண்டு முறியடித்து, தேசிய இனத்தின் விடுதலையை பெற்றெடுக்கப் போராடிக்கொண்டிருக்கின்ற விடுதலை அமைப்பும் தன்னை நவீனப்படுத்துவது காலத்தின் தேவையாகப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தலைமைதாங்கி நடத்திவருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகள் எதிரிக்கெதிரான போர்க்களத்தை செவ்வனே எதிர்கொள்ளும் அதேவேளை, நவீன விஞ்ஞான வளர்ச்சியின் வசதிகளை போராட்டத்தின் பலமாக்கிக்கொள்ளும் தேவையை விடுதலைப் போராட்டம் உணர்ந்து முந்திச் செயற்படவே தலைப்படும்.

விஞ்ஞான வளர்ச்சியின் துணையுடன் எதிரியானவன் இன அழிப்பை தீவிரப்படுத்த, அதற்கெதிராக விடுதலை அமைப்பும்



படிப்பகம்

www.padippakam.com



இராணுவத் துறையிலும், அரசியற் செயற்பாடுகளிலும் விஞ்ஞான வளர்ச்சியை துணையாக்கிக் கொள்ளும்.

இவற்றிற்கெல்லாம் பொருளாதாரமே ஆதாரமாய் உள்ளது. 21–ம் நூற்றாண்டை ஒரு விடுதலை நூற்றாண்டாக தமிழர்கள் எதிர்கொள்வர் என்பதில் சந்தேகமில்லை. இனவிடுதலை சாத்தியமாவதும், உலகவரைபடத்தில் புதிய சின்னஞ்சிறிய அழகிய தேசம் உதயமாவதும் இந்த நூற்றாண்டில் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த இனிய காலப்பிரசவத்திற்கு, பொருளாதாரத்தின் தேவை ஆதாரசுருதியாய் ஆட்சி செய்கின்றது. உலகமெல்லாம் பரவிவிரவி வாழுகின்ற தமிழர்களின் பிரதான நிகழ்ச்சித் திட்டமாக, ஈழவிடுதலைக்கு வாரிவழங்குவதென்றும், பொருளாதாரத் தேவையை ஈடுசெய்ய அனைத்து வழிகளிலும் உழைப்பதென்றுமே ஆதல்வேண்டும்.

விடுதலைப் புலிகளிடம் வான்படை உண்டு என்ற உறுதிப்படுத்தலுடன், சிங்கள அரசு 99–ம் ஆண்டில் நுழைந்துள்ளது. இப்பொழுது சிங்களத்திற்கு இரட்டிப்புக் கலக்கம். கடற்படையை விடுதலைப்புலிகள் மேலும் நவீனப்படுத்தி பலப்படுத்தியுள்ளனர் என்ற பதைபதைப்புக்கு மத்தியில், விமானப்படையின் தோற்றம் சிங்களத்தை இருப்புக்கொள்ளவிடாமல் ஆட்டிப்படைக்கின்றது.

சிறீலங்காவின் பொருளாதாரத்திற்கு சற்றும் பொருத்தமில்லாத வகையில் பெருந்தொகை நிதியை வான்பரப்பின் பாதுகாப்புக்கு ஒதுக்க, சிங்களத்தை கட்டாயப்படுத்தியுள்ளது. பெருந்தொகை நிதியை ஒதுக்கி, விடுதலைப் புலிகளின் சின்னஞ்சிறியவான்படையை எதிர்கொள்ள சிங்களப்படை இந்த ஆண்டில் தன்னை வருத்திக் கொள்ளவேண்டியுள்ளது.

அதேபோன்று, விடுதலைப் புலிகளின் எல்லைகளை தரையால் எட்டமுடியாத நிலையில் வான்தாக்குதலால், தரையை ஆக்கிரமிக்க, விமானப்படையை நவீனப்படுத்தவும் சிங்களம் திட்டமிட்டுள்ளது. நவீன யுத்தவிமானங்கள் உலங்கு வானூர்திகள் கொள்வனவு செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**ஐம்பது வருடங்கள் கடந்த நிலையில், ஒருவிதமான பதட்டம், பயம், எதிர்காலம் குறித்த நம்பிக்கையீனம் ஆகியவற்றின் மத்தியிலே சிங்களம் தனது சுதந்திர நாளைக் கொண்டாட வேண்டிய கட்டாயம் என்பது காலத்தின் விசித்திரமாக்கப் படுகின்றது. முன்னைய காலங்களைவிட இந்த ஆண்டு சிறீலங்கா தனது சுதந்திரநாள் கொண்டாட்டங்களை வெகுவாகச் சுருக்கிக்கொண்டு அடக்கி வாசிக்கவேண்டிய கட்டமாகப் போய்விட்டது.**

வேற்று நாடு ஒன்றுடன், அறிவிக்கப்பட்ட யுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு தேவையான ஆயுதக்குவிப்பையும் யுத்தவிமானங்களின், யுத்தக்கப்பல்களின் கொள்வனவுகளையும் மேற்கொள்வது போன்று, சிங்களப்படை பெரும் யுத்த ஏற்பாடுகளில் இறங்கியுள்ளது.

**மாதவன்**
**ஜனவரி - பெப்ரவரி**
**1999**
**- சாத்திரியார் -**



இந்த நிலையிலேயே, சிறீலங்கா அரசு பெப்ரவரி 4–ம் திகதி, தனது ஐம்பத்தியோராவது சுதந்திர நாளை மௌனமாக அனுட்டித்துள்ளது. கண்டித் தலதாமாளிகைக் குண்டுத் தாக்குதலின் ஒரு வருட நினைவை புத்தபிக்குகளும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளும் கண்டியில் சத்தியாக்கிரகம் நடத்தி அநுட்டித்தனர். அடுத்த சில தினங்களில், கொழும்பில் இராணுவ வலையத்துள் நின்றபடி சந்திரிகா அம்மையார் சிங்கக் கொடியேற்றி, நாட்டின் சுதந்திர நாளை கொண்டாடினர்.

ஐம்பது வருடங்கள் கடந்த நிலையில், ஒருவிதமான பதட்டம், பயம், எதிர்காலம் குறித்த நம்பிக்கையீனம் ஆகியவற்றின் மத்தியிலே சிங்களம் தனது சுதந்திர நாளைக் கொண்டாடவேண்டிய கட்டாயம் என்பது காலத்தின் விசித்திரமாக்கப்படுகின்றது. முன்னைய காலங்களைவிட இந்த ஆண்டு சிறீலங்கா தனது சுதந்திர நாள் கொண்டாட்டங்களை வெகுவாகச் சுருக்கிக்கொண்டு அடக்கிவாசிக்கவேண்டிய கட்டமாகப் போய்விட்டது.

ஒரு தேசிய இனத்தின் விடுதலையை, சுதந்திரத்தை அங்கீகரிக்க



படிப்பகம்

www.padippakam.com



மறுத்து, அத்தேசிய இனத்தை அடக்கி ஒடுக்கி அரசாள நினைக்கின்ற சாரார் தம் சுதந்திரத்தைக் கூட இழந்துவிடுகின்ற பரிதாபத்தை கண்முன்னாலேயே காணுகின்ற சந்தர்ப்பத்தை உலகநாடுகளுக்கு சிறீலங்கா தந்துள்ளது.

அதேபோன்று, பயங்கரவாதத்தை தோற்றுவித்து அதன் துணையுடன் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக்கொள்ள தமிழர்களை பலிகொண்ட சிங்களம் இன்று அதற்கே பலியாகிக்கொள்ளும் விந்தை அரங்கேறிக்கொள்வதும் நல்ல விந்தையாகவே படுகின்றது.

பயங்கரவாதம் வன்முறை வெறியாட்டங்கள் என, தமிழர்களுக்கெதிராகவே புழக்கத்தில் விடப்பட்ட இருமுனை ஆயுதம் இன்று அவர்களைப் பதம்பார்க்க ஆரம்பித்திருக்கின்றது என்பதற்கு, சிறீலங்காவில் தைமாதம் நடைபெற்ற வடமேல் மாகாணசபைத் தேர்



தல் வன்முறைகள் நல்ல உதாரணம்.

ஆக, இன அடக்குமுறையில் இன அழிப்பில் ருசிகண்ட சிங்களம் இன்று, தன் இரத்தத்தையே சுவை பார்க்கவேண்டிய கட்டாயத்தில் அதனைக் காலம் தள்ளியுள்ளது.

தை மாசி மாதங்கள் அதற்கான அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளன. எதிர்வரும் மாதங்கள், பல தேர்தல்களைச் சந்திக்க இருப்பதால் சிங்களம் தனக்குள்ளே மோதிக்கொண்டு இரத்த ருசி பார்க்கின்ற காட்சிகள் நிரம்பவே நடக்கும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில், கொலை கொள்ளை தீவைப்பு வன்முறை வெறியாட்ட பயங்கரவாதத்திற்கு சிங்களம் பையப்பைய தன்னை பழக்கிக் கொண்டுள்ளது. பயங்கரவாதத்தின் விளையாட்டக்களமாக சிங்களமே தற்போது மாறியுள்ளது. காலப்போக்கில் உள்ளுக்குள்ளேயே விபரீதங்கள் பல தோன்றும் தீவிரமடையும் என்பதே சிங்களத்தின் தற்போதைய கவலையாக உள்ளது.

'பர்மா மீது பொருளாதாரத் தடை விதித்து எமது நாட்டில் ஜனநாயகத்திற்கான போராட்டத்திற்கு ஆதரவு தாருங்கள்'

– ஆங் சாங் சூ கி

பர்மாவில் நடைபெறும் இராணுவ அரசை நீக்கிவிட்டு ஜனநாயக ஆட்சியை நிறுவ போராடும் மக்கள் சார்பாக டென்மார்க்கில் இயங்கும் டெனிஷ்–பர்மா குழுவினர் மேலே உள்ள வசனங்கள் பொறிக்கப்பட்ட அஞ்சல் அட்டைகளை பர்மாவுடன் வர்த்தக ரீதியான தொடர்புகளை வைத்துள்ள சகல நிறுவனங்களுக்கும் அனுப்பி வருகின்றனர்.






படிப்பகம்

www.padippakam.com



## கடலுக்கடியில்

# பழைய கப்பல்களைத் தேடுகின்றனர்



“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்றனர் எம் மூதாதையர். இம் முதுமொழி நாட்டில் கடலுக்கடியில் அடித்துப் புதைக்கப்படுகின்ற சிங்களப் போர்க் கப்பலில் இருந்து ஆயுத தளபாடங்களைக் கழற்றும் தமிழ் வீர வீராங்களைகளிற்கென்று சொல்லி வைத்தார்களோ என்னவோ இதுபோலவே பல புதைபொருளாய்வாளர்கள் கடலுக்கடியில் புதைந்து கிடக்கும் பழம் கப்பல்களைத் தேடிப் பிடிப்பதில் மிகவும் பாரிய முயற்சிகள் செய்து வருகின்றனர். ஆனால் சவாலாகவே அமைந்திருந்தது. 60 மீட்டர் ஆழம் வரையும் சென்று புதைந்து கிடக்கும் பொருட்களை மட்டுமே ஆராய்வதற்கு இதுவரை காலத் தொழில் நுட்பம் அனுமதித்தது. ஆதலால் உலகில் இருக்கும் கடலில் 97 விழுக்காடான கடல் பகுதி இதுவரை காலமும் ஆராயப்படாமல் இருந்திருக்கின்றது. இன்று புதை பொருள் ஆராய்ச்சியாளர்களுக்கு பெரியதொரு உதவியாக NR 1 என்கின்ற உலகின் மிகச் சிறிய அணு உலை குண்டு இயங்குகின்ற நீர்மூழ்கிக் கப்பல் உள்ளது. கப்பலின் உள்ளே இருந்துகொண்டு கடலின் படுக்கையில் இருக்கின்ற சிறிய பொருட்களை எடுப்பதற்காக இயக்கப்படும் இவ் வேலைக்காரக் கை பொருட்களைச் சேகரித்து இக் கையின் முன்னால் பொருத்தப்பட்டிருக்கும் பெட்டிக்குள் பொருட்களை இடுகின்றது.

அண்மையில் மத்தியதரைக் கடலின் படுக்கையில் இந் நீர்மூழ்கும் கலத்தின் உதவியால் 800 மீ. ஆழத்தில் புதைந்து கிடக்கும் 8 றோம ராச்சியக் கப்பல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இக் கப்பல்களில் பல 2000 வருடத்திற்கு முற்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இயேசுநாதர் பிறப்பதற்கு 100 வருடங்களுக்கு முன்னர் புதைந்த கப்பல்கள் சில உள்ளன. இயேசுநாதர் பிறந்து 400 வருடங்களிற்குப் பின்னர் கடல் அடியில் மூழ்கிப் போயுள்ள கப்பல்களும் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இயேசுநாதர் வாழ்ந்த காலத்தில் றோமர்களின் ஆட்சி அவர் வாழ்ந்த நாடுகளில் நடந்தது என்பதும் இயேசுநாதர் றோமர்களின் ஆட்சியிலேயே சிலுவையில் அறையப்பட்டார் என்பதும் தெரிந்ததே. ஆகவே புதைந்து கிடக்கும் இக் கப்பல்கள் அவ்வளவு பழையது என்னும் பொழுது அக் கப்பல்களிலிருந்து பெறப்படும் பொருட்கள் சரித்திரத்தை மேலும் வெளிச்சம் போட்டுக் காட்ட உதவும் பொருட்களாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இந் நீர்மூழ்கிக் கலம் அமெரிக்க கடல் படைக்குச் சொந்தமானது. இக் கலன்கள் மூலம் புதைபொருள் ஆய்வாளர்கள் பெரும் சரித்திரம் படைக்கப் போகின்றனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மத்தியதரைக் கடல் ஆய்வு வேலைத்திட்டத்திற்கு தலைமை தாங்கிய றொபேர்ட் டி பல்லாட் (ROBERT D BALLARD) கொடுத்த தகவலின்படி இன்று வட ஆபிரிக்காவில் துனீசியா இருக்கின்ற இடத்தில் இருந்த பண்டைய நகரம் கார்த்தக்கோ மற்றும் சார்டீனியா தீவுகளுக்கும் இடையில் இருக்கின்ற கடலடியிலேயே இவ் ஆய்வு நிகழ்த்தப்பட்ட




படிப்பகம்

www.padippakam.com



தென்றும் இக் கடல் பகுதி பண்டைய காலத்தில் வணிகக் கப்பல் போக்குவரத்துக்கள் செறிவாகக் காணப்பட்ட பகுதியாக இருந்தது. இத்தாலியில் இருந்து கார்த்தக்கோவிற்கு திராட்சை மதுரசம் கொண்டு செல்லப்பட்டதுடன் கார்த்தக்கோவில் இருந்து இத்தாலி வரும் பொழுது தானியங்களும் ஒலிவ் காய் போன்ற பொருட்களும் கொண்டுசெல்லப் பட்டது என்கிறார் ஆய்வு வேலைத் திட்டத்தை தலைமைதாங்கிய அதிகாரி றொபேர்ட். இக் கப்பல்களில் திராட்சை மதுரசம் கொண்டு செல்லும் கூசாக்கள் போன்ற அமைப்புக் கொண்ட மதுக்கொள்கலன்கள், கட்டிடப் பொருட்கள், வெண்களி மட்பாண்டங்கள் போன்றவை ஆய்வின்போது எடுக்கப்பட்டுள்ளன. இந்த நீர் மூழ்கும் கலம் இல்லாவிட்டால் இக் கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தியிருக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. அத்துடன் மற்றைய கலன்களைப் போல் இக் கலம் கடலின் மேல் மட்டத்திற்கு வந்து காற்றெடுத்துச் செல்லும் அவசியம் இல்லை. ஆகவே கடலுக்கடியில் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் ஒளிந்து கிடக்கும் வல்லமை கொண்டது இந்த NR 1. நீர்மூழ்கிக் கலத்தின்



கட்டுப்பாட்டறையில் இருக்கின்ற ஆய்வாளர்கள் நீர்மூழ்கியில் உள்ள சக்தி வாய்ந்த நுண் ஒலி அலைக் கருவிகள் மூலம் ஒவ்வொரு நாளும் ஒரு புதிய கப்பல் சிதைவுகளை கண்டுபடிக்கின்றனர். இவ் ஒலி அலைக் கருவிகள் மூலம் கடலுக்கடியில் புதைந்து கிடக்கும் பொருட்களின் இடம் அறிய முடியும். நீர் மூழ்கும் கலத்திற்கு உதவியாக ஒரு துணைக் கப்பல் கடல் மேற்பரப்பில் காத்திருக்கும். இக் கப்பல் கடற்பரப்பிலிருந்து ஜேஸன் என்ற செல்லப் பெயர் கொண்ட தானியங்கிக் கலம் ஒன்றினை கடல் அடியில் இருக்கும் சிதைவுகளை நெருங்கிப் பார்வை செய்ய கீழே அனுப்பி வைக்கும். இத் தானியங்கிக் கலம் நீர் மூழ்கி கண்டுபிடித்த சிதைவுகளை நெருங்கிப் பார்வை செய்து படம்பிடிப்பதுடன் தேவையான பொருட்களை தனது வேலைக்காரக் கையால் எடுத்து துணைக் கப்பலிலிருந்து இரும்புக் கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்கும் கூட்டினுள் இடும். ஜேஸனை துணைக் கப்பலில் இருந்து கடல் அடிவரை நீளும் ஒரு கடிவாளத்தின் மூலம் இயக்குகின்றார்கள்.

- அலர்மேலு

# உலகின் நீளமான மீசை!



இந்தியாவில் கல்கத்தாவிற்கு 450 கி.மீ. தெற்குப் புறமாக உள்ள சுந்தர் கிராத் என்ற சிறு கிராமத்தில் வாழ்ந்து வருகிறார் கல்யாண் ராம்ஜி. இவருடைய மீசையே தற்போது உலகின் அதி நீளமான மீசையென்று கூறப்படுகிறது. இவரது மீசையின் முழு நீளம் 11 அடி அல்லது 3.5 மீட்டர்களாகும். இடது பக்க மீசையை விட வலதுபக்க மீசை 7 செ.மீ அதிகமானது. மீசையை அறுந்து போகாமல் காப்பாற்றுவதுதான் கல்யாண்ஜிக்கு சிரமமான பணியாக உள்ளது. முடிந்து வைத்திருந்த மீசையை தற்போது இருபக்கக் காதுகளிலும் சுற்றி வைத்திருக்கிறார். தலை நரைத்துவிட்டாலும் மீசை நரைத்துவிடாது எண்ணெய் தடவி பத்திரமாகப் பாதுகாத்து வருகிறார். இவர் சிகையலங்காரத்தை ஓர் பாடமாகக் கற்றவராகும்.







படிப்பகம்

www.padippakam.com



# புத்தகம் படிப்பது எப்படி?

இந்தக் கட்டுரை "படிப்பது எப்படி" என்பதைப் பற்றியது. தமிழில் படிப்பதைப் பற்றித்தான். ஆங்கிலமோ பிரஞ்சு மொழியோ அல்ல. பெரும்பாலானவர்கள் படிப்பதற்கு நேரமில்லை என்று சொல்வார்கள். அது பொய். எத்தனையோ நேரத்தை நாம் வீணடிக்கிறோம்.

சினிமா வரிசைகளில் காத்திருக்கிறோம், டாக்டர் அறைகளின் வெளி அறைகளிலும், மனுக்களுக்கும் இப்படியே எத்தனையோ விடயங்களுக்காக காத்திருக்கிறோம். சில சமயம் குறிக்கோள் இல்லாமல் முகட்டு வளையைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்கிறோம். படிக்க நேரமில்லை என்று சொல்வது – படிப்பு என்னும் பொறுப்பிலிருந்து நழுவுவதற்கு சொல்லும் சப்பைக் கட்டு.

மூச்சுவிட நேரமில்லை என்று சொல்வது போலத்தான் புத்தகம் படிக்க நேரமில்லை என்று சொல்லும் காரணம். புத்தகம் வாங்கக் காசு இல்லை என்று சொல்வது சரியான காரணம் அல்ல. எல்லா நூலகங்களிலும் ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன.

என்ன படிக்கவேண்டும் என்பதைவிட எப்படிப் படிக்கவேண்டும் என்பதுதான் அதிகம் சொல்ல விரும்புகிறேன்.

தினம் படியுங்கள். ஐந்து நிமிடம் அல்லது பத்து நிமிடம் அல்லது ஒரு மணி படியுங்கள். தினம் என்பதுதான் இதில் அழுத்த வார்த்தை. நான் 1500 பக்கங்கள் கொண்ட Oxford Book of Humorous prose என்கிற புத்தகத்தை தினம் பாத்ரூமில் கொஞ்சம் கொஞ்சமாகப் படித்து முடித்துவிட்டேன். இந்த மாதிரி தினம் படிக்க கட்டுரைத் தொகுதிகள், சிறுகதைத் தொகுதிகள், கவிதைத் தொகுதிகள் ஏற்றவை. சங்க இலக்கியத்தில் புள்ளினங்கள் போன்ற புத்தகங்களை பாத்ரூமிற்கு எடுத்துச் செல்லாதீர்கள். அவை எல்லாம் தூக்கம்வரப் படிப்பவை. எந்தப் பக்கத்தை வேண்டுமானாலும் பிரித்துவைத்து படிக்கக்கூடிய புத்தகங்களை தேர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்.

பாத்ரூமில் படிக்கவேண்டுமென்பதை நான் வலியுறுத்தவில்லை. இயற்கை வைத்தியர்கள் பாத்ரூம் போகும்போது வேறு கவனம் ஏதும் இல்லாமல் இருப்பது நல்லது என்பர். பாத்ரூம் என்பதை உதாரணத்திற்குச் சொன்னேன். கிடைக்கும் நேரத்திலெல்லாம் படிப்பதுதான் முக்கியம். வெளியில் செல்லும்போது பையில் ஏதாவது புத்தகம் வைத்திருப்பது நல்ல பழக்கம். ஆனால் வீதியைக் கடக்கும் போதோ அல்லது பஸ்ஸில் தொங்கும்போதோ படிக்க முயற்சி செய்யாதீர்கள். படிக்க ஆவி உயிருடன் வேண்டும்.

ஒரே சமயத்தில் நான்கு அல்லது ஐந்து புத்தகங்கள் படிப்பதில் தவறில்லை. இதில் கொஞ்சம் அதில் கொஞ்சம் என்று மேயலாம். ஒன்று அலுப்புத்தட்டினால் மற்றதுக்குத் தாவலாம். இரைந்து படிக்காதீர்கள். இரைந்து படிப்பதில் சக்தி விரயமாகிறது. படிக்க அதிக நேரமும் ஆகும். பக்கத்தில் இருப்பவர்கள் புகார் செய்யலாம்.

எந்த எழுத்தாளனையும் குறிப்பாக புதிய எழுத்தாளர்களின் முதல் புத்தகங்களை படிப்பது நல்ல யோசனை. சிலர் ஒரு நல்ல முதல் புத்தகம் எழுதிவிட்டு அதையே திருப்பித் திருப்பி வேறு விதத்தில் வாழ்நாள் முழுவதும் எழுதிக் கொண்டிருப்பார்கள். இவ்வகை ஆசாமிகளின் ஒரு புத்தகம் படித்தால் போதும். படித்த புத்தகங்களைவிட படிக்கவேண்டிய புத்தகங்களின் பட்டியலை வைத்துக் கொள்வது நல்லது. இருபது சதவீதம் கதை, நாவல்களும் மற்ற 80 சதவீதம் கட்டுரை, அறிவியல், இலக்கியம் இப்படிப் படிப்பது என் சிபாரிசு. இது என் விகிதம். உங்கள் விகிதம் என்னவென்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கென்றே ஒரு பட்டியல் இருப்பது தேவை.

நூலகங்களுக்குச் செல்லும் போது உங்கள் குழந்தைகளையும் அழைத்துச் செல்லுங்கள். என் தந்தை அப்படித்தான் செய்தார். அவர்கள் புத்தகம் இல்லை என்றால் எதற்கு வரி கொடுக்கிறோம், இந்தப் புத்தகங்களைக் கொண்டு வந்து தாருங்கள் என்று சண்டை போடவும் தேடிப் படிக்கவேண்டியது உங்கள் பொறுப்பு.

வாழ்த்துக்கள்! நிறையப் படியுங்கள்.

**தமிழக எழுத்தாளர்**
**சுஜாதா**



படிப்பகம்

www.padippakam.com



# என்றும் பதினாறு

"சுவர்க்கத்தின் பரிசு" எனப் போற்றப்பட்ட கணித மேதை சிறீனிவாச இராமானுஜர் எனும் இந்தியத் தமிழறிஞர் தனது சிறு பராயத்தில் ஒரு போது, அவரின் நண்பன் ஒருவரின் தாயார் சுடுகாட்டைக் கடந்து பயணம் செய்யக்கூடாது என அறிவுரை கூறினார்.

இதற்கு இவர் 'ஏன் மாமி போகக்கூடாது எல்லோரும் ஒரு நாள் அந்த இடத்திற்குப் போய்ச் சேரவேண்டியவர்கள்தானே. 'பிறப்பு' ஏற்பட்டால் 'இறப்பு' இருக்கத்தான் செய்யும். பிறப்பு என்பது நான்கு எழுத்து. இறப்பு என்பது நான்கு எழுத்து. இந்த நான்கை நான்கால் வகுத்தால் ஈவு ஒன்றுதான் வரும்' என்றாராம். பிறப்பிற்கு இறப்பு எனும் ஒரே யொரு முடிவு நிச்சயமாக உள்ளது என்பதை அறிஞர் தன் கணித அறிவு கொண்டு உணர்த்துவதை உணரலாம். இவ்வாறே 'இளமை' எனும் பருவம் முடிவடைவது 'முதுமை' எனும் பருவம் ஆரம்பிக்கும்போதே. இளமை என்பது மூன்று எழுத்து, முதுமை என்பது மூன்று எழுத்து இம் மூன்றை மூன்றால் வகுத்தால் ஈவு ஒன்று தான். இளமைப் பருவம் எவ்வாறு கைவரப் பெறுகின்றதோ அவ்வாறே முதுமைப் பருவமும் கைவரப் போகிறது. எனவே இளமை உண்டு எனில் முதுமையும் உண்டு என்பதொன்றே முடிவு. இவ்வாறு இறப்பும், இளமையும், முதுமையும் இருக்க இறப்பெனும் பிறப்பின் முடிவையும் முதுமை எனும் இளமையின் முடிவையும் இல்லாது முடிவு கட்ட முனைந்து நிற்கின்றனர் விஞ்ஞானிகள். மருத்துவத்தில் விஞ்ஞானத்தின் செல்வாக்கை உபயோகித்து இவற்றை யெல்லாம் நிகழ்த்த தயாராக நிற்கின்றனர். இல்லை தயாராகிக் கொண்டு நிற்கின்றனர். இம் முயற்சியில் அல்லும் பகலும் அயராது உழைக்கும் அறிவியலாளர்களின் பல்வேறுபட்ட முடிவுகள் பற்றி நோக்கலாம்.

## கலங்கள் (செல்கள்) பிரிந்து வளர்தல்

ஒரு கலம் பிறக்கும் வேளையே அது எத்தனை தடவை மரபியல் றது.

முதுமையை வெல்லப் பாடுபடும் இவர்களின் வெற்றிப் படியாக மனித கலங்களை மரணிக்க விடாது சோதனைக்கூடங்களில் வைத்திருப்பது அமைகின்றது.

## தனிம ஒட்சிசன்

ஃப்ரீ றடிக்கல்ஸ் (Free Radicals) எனப்படும் தனிம ஒட்சிசனானது கலங்களில் சக்தி பிறப்பிக்கப்படும் போது தோன்றுகிறது. இவ்வாறு சக்தி பிறப்பிக்கும் போது மில்லியன் கணக்கில் இவை உருவாகின்றன. சுயாதீனமான இத் தனிம ஒட்சிசன்கள் உடம்பில் கலங்களைத் தாக்கி முதுமைக்கு இட்டுச் செல்கின்றன. இவற்றின் செயற்

# முதுமையை வெல்வோம் இளமையாய் வாழ்வோம்

முறையில் பிரிகையடைய வேண்டும் என நிர்ணயிக்கப்படுகின்றது. ஆனால் அதை பிரியும்படி தூண்டும் செயற்பாடானது குறைவடைந்து செல்வதால் பிரியும் தடவைகள் குறைவடைய முதுமை தோன்றுகிறது. எனவே ஆரம்ப பிரியும் தன்மையை நிலைநிறுத்தி விட்டால் இளமையும் நிலைத்து விடும். இந்த வகையில் மரபியல் முறையில் கலம் பிரிகையடைவதை நிர்ணயிப்பதைக் கண்டறிந்து அதன் தொழிற்பாட்டை உணர்ந்து முதுமையை விரட்ட ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர் விஞ்ஞானிகள். மேலும் கலத்தின் பிரிகை, வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடைய DNA மூலக்கூறு பற்றியும் இங்கு கவனிக்கப்படுகின்

பாட்டை விற்றமின் C, E ஆகியன வழங்கும் சக்திகள் எதிர்த்துக் கட்டுப்படுத்துகின்றன. ஆனால் நெடு நாட்களான இவற்றின் தொடர தாக்குதல்கள் வெற்றி பெற்று முதுமையைப் பெற்றுத் தருகின்றன.

## ஓமோன்கள்

1960–ல் பிரான்ஸ் நாட்டுப் பேராசிரியர் எடினே எமிலி வெலியோ (Edinee Emily Wolyo) மனித உடம்பிலுள்ள டி.எச்.ஈ.ஏ சல்பேற் எனும் ஓமோனைக் கண்டறிந்தார். இவருடன் கூடிய பேராசிரியர் தோமஸ் மனிதனின் முதுமைக்கும் டி.எச்.ஈ.ஏ சல்பேற்



படிப்பகம்

www.padippakam.com



ஓமோனுக்கும் தொடர்பு உண்டா என ஆராய்ந்தனர். இவர்களின் முயற்சியின் பயனாக 1995 ஜன வரியில் டி.எச்.ஈ.ஏ சல்பேற் வயது கூடக்கூட குறைந்து செல்கின்ற மையே முதுமைக்குக் காரணம் எனக் கண்டறிந்தனர். இதன் உண்மைத் தன்மையைப் பரிசோ தனை செய்ய முனைந்த மருத்து வர் சாமுவேல் பரிசோதனையில் ஈடுபடுத்திய முதியவர்களின் மன நிலை மூளைத்திறன் சிறப்படைந்த துடன் தசைகளின் வலு எலும்பின் உறுதி ஆகியனவும் அதிகரித்திருந் தது.

ஆனால் இவ் ஓமோன் கண்டு பிடிப்புக்கூட முதுமையை ஒழித் துக் கட்டிவிட வழி சமைத்து விடவில்லை. அதை இயற்ற ஒரு துப்புக் கிடைத்ததாகவே கருத முடியும். இதனை மருத்துவர் தோமஸ் ஒப்புக்கொள்கின்றார். மேலும் சிறந்த உறக்கத்திற்கும், உடற்கலங்களைப் பாதுகாப்பதற் கும் நோய் எதிர்ப்புத் தன்மையை பலப்படுத்தவும் உதவும் ஒருவகை ஓமோனும் மற்றும் ரெஸ்ரொஸ் ரேரோஸ் ஓமோனும் இளமை யைப் பேணக்கூடியன. இளமை வாழ்வில் செல்வதற்குச் செலுத் தும் ஓமோன்களை ஊசி மூலம் செலுத்துவதில் வெற்றி கண்டுள் ளனர். பல இலட்சக்கணக்கில் ஏப்பமிடும் இச் சிகிச்சையால்கூட முதுமையை பின்னடிக்க முடி யுமே ஒழிய ஒழிக்கமுடியாது.

இளமைப் பருவம் உற்சாகமும், அழகும், துடிப்பும் நிறைந்த பரு வம், இளமைப்பருவத்தின் வேலைச் சுமையினால் இழைப்படைந்த வன் ஓய்வு பெறும் பருவமாக முதுமைப் பருவம் விளங்குகிறது. யாருக்குத்தான் சப்பென்றிருக்க ஆசையாகவிருக்கும். இந்த உடல் சோராவிட்டால் ஓய்வு எதற்கு என்று உடலின் சோர்வை உளத் தின் சோர்வை நீக்க கங்கணங் கட்டி நிற்கின்றனர். அறிவியல் இதற்கும் பச்சைக்கொடி காட்டி யுள்ள போதும் போகும் பாதை யில் பல்வேறு இடர்களும் தடை களும் உள்ளதால் நுழைவதற்கு முடியாது தவிக்கின்றனர். இங்கு இளமையின் அழகை விரும்பு வோரிற்கு நல்ல முடிவே உள்ளது.

முகப்பூச்சுக்களையும், உடற் பூச்சுக்களையும் பூசுவதன் மூலம் அழகைப்பேண முயல்கின்றனர். மேலும் சுருக்கு விழுந்த முகத்தின் முதுமைச் சாயலை மாற்ற பிளாஸ் ரிக் அறுவைச் சிகிச்சை, இரசா யன முறை தோலுரிப்பு ஆகியன பயன்படுகின்றன. ஆனால் தற் போது கணனியின் உதவியுடன் மிருதுடிப்பு (Ultrapulse) அறுவைச் சிகிச்சை லேசரைக் கொண்டு தளர்த்த தசைநார்களை (Colleyen) தசை நார் சுருங்கச் செய்யலாம். இரசாயனப் பொருட்களால் உட லிற்கு ஏற்படும் தீங்கு இம்முறை யில் இல்லாதிருப்பதுடன், கச்சித மாகவும் வேலை செய்யமுடிகிறது. இம்முறையில் 58 வயது மூதாட் டியை 35 வயதுப் பெண்ணாக் கலாம் என்கிறார் அமெரிக்க மருத்துவரான லாகி கிற்சொக் (Lahy Hitchcoch).

என்னதான் விஞ்ஞானம் முனைந்தாலும் இதுவரை கால மும் இறப்பையோ, முதுமை யையோ இல்லாது செய்யமுடி யாது போய்விட்டமை கண்கூடு. ஆனால் முதுமைப் பருவத்தை குறுக்கி, இளமைப் பருவத்தின் ஆயுளைக்கூட்ட முடியும் என விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. உங்க ளிற்கும் இளமையாக அதிக காலம் வாழ ஆசையா? என்ன? யாருக் குத்தான் ஆசை வராது இதோ சில வரிகள் நீங்கள் உங்கள் இள மைப்பருவத்தை அதிகரித்திட.....

1. காய்கறி வகைகள், பழ வகைகள் ஆகியவற்றை உணவிற் சேர்த்துக் கொள்ளுங்கள். அசைவ உணவினைக் குறைத்துக்கொள் ளுங்கள்.

2. இரத்தச் சுற்றோட்டத்தை சீராக்க உடல் வலுவைப் பேண உடற் பயிற்சியைத் தினமும் மேற்கொள்ளுங்கள்.

3. சோம்பலிற்கு ஒருபோதும் இடங்கொடாதீர்கள். சுறுசுறுப் பாக இருக்க பழகிக்கொள்ளுங் கள்.

4. உயற்தோற்றத்தைப் பேண வெய்யிலில் உலவுவதைத் தவிர்த் துக் கொள்ளுங்கள்.

5. பொறாமை, சினம் ஆகிய வற்றை நீக்கி பொறுமையுடன் சிரித்து வாழப் பழகுங்கள்.

இளமைத் துடிப்பை பேண ஆயுளைக் கூட்ட மேற்போன்ற வழிகளைப் பின்பற்றுங்கள் என் றும் பதினாறாக வாழமுடியுமா? என முயன்று பாருங்கள். மார்க் கண்டேயருக்குக் கிடைத்த யௌ வனம் கிடைக்கப்பெற முயலு வோம்.

**அளவையூர் நிலா**

# ஆந்தை



ஆந்தைக்கு பார்வைத்திறன் அதிகம் இருப்பினும், ஓரப்பார்வை பார்க்க ஆந் தையால் முடியாது. காரணம் அந்தளவுக்கு விழியை அசைக்க அதனால் முடியாது. இதற்கு இழப்பீடு செய்வது போல் (அதனிடம்) ஓர் அபூர்வ ஆற்றல் இருக் கின்றது. ஆந்தையால் முழு வட்டத்திற்கும் தலையை திருப்ப முடியும் அதாவது பின்னால் நடப்பதைக் கூட தலையைத் திருப்பி பார்க்க முடியும்.



படிப்பகம்

www.padippakam.com



# நிலவுக்குப் போதல்

நான் குழந்தையாய் இருக்கையில்
அம்மா அழைக்க
மலை மீதேறி
மல்லிகைப் பூவும் கொண்டு வரும்

திசையெலாம் ஒடுங்கும்
மனிதர்களின் மூச்சைச்
சுமந்த வலியால்
உழலும் காற்று வெளியில்
இன்னும் கிடந்து காயும்

திருவிழா முடிந்த
கோயில் தெரு வீதி போல
என்
நிலவு முற்றம் கிடக்கும்

பூமிக்கு பாலாறு ஓடி வார்ப்பது
போல
பொழிகின்ற நிலவில்
கனன்று
சுடர்ந்த காதல் வாழ்க்கை
அந்திம காலத்தை நெருங்குகிறது

என் வாழ்வோடிருந்த நிலவில்
நெருப்புப் பிடிக்கையில்
பிடில் வாசித்தவனின்
பேரப்பிள்ளையாகி
ஊரைக் கடந்தவன்.

செம்புள்ளியும்
கரும்புள்ளியும்
குத்திக் குத்தி
மனது காயப்படுகிறது

ஆண்டி
குண்டி மண்ணை தட்டி விடுகிறாற்
போலவா
எல்லாம் முடிந்தது?
நேர்த்திக் கடன் பூண்ட
செதில் காவடி ஆட்டக்காரனைப்
போல
தேகமெல்லாம்
குத்தி இழுக்கிற கோடி வதைகள்

பாதை தவறிய
என் கை இடுக்குகளில்
தேம்பி அழுகின்ற
என் குழந்தைகள்
என் பாதி உயிரையும்
எடுக்கிறார்கள்

மூடுபனிக்குள்
சபிக்கப்பட்டது என் வாழ்வு

மாட்சி மிக்க
மண்ணின் வாழ்வு
மங்கிய நிழற் படச் சுருள்களாக
மனக் கண்களில் விரிந்து
மானுடத்தை சதா உறுத்தும்

ஆயினும்
இன்னும் அகதி மனிதன் நான்
நிலவுக்குப் போகிற
கனவோடு தான் இருக்கிறேன்

கனவோடிருத்தலும்
காத்திருத்தலும்
எனைத் தொடரா வண்ணம்
அகதி மனிதன் எனக்கு
நிலவுக்குப் போதல்
நிகழ்தல் வேண்டும்

நிலவுக்குப் போதல்
நிகழ்தல் வேண்டும்.

— சுபாஸ் —



படிப்பகம்

www.padippakam.com



# சிறுமியின் வயது இரண்டேயிரண்டு!

## ஆனால் எடையோ 136 கிலோ



டீப்ரா என்ற இந்த இரண்டு வயதுக் குழந்தையைப் பார்த்த எவருமே அதிசயப்படாமலிருக்க முடியாது. இவருடைய தந்தை ஈவானுடைய நிறை 135 கிலோ. "தனது இரண்டு வயது மகளைவிட தான் ஒரு கிலோ நிறை குறைவு" என்று சிரித்தபடியே கூறுகிறார். இதுவரை உலகத்தின் அதிகூடிய நிறையுள்ள குழந்தை பில்லிஜென்ஸ் என்றே அறிந்திருந்தோம். இவரது நிறை 120 கிலோ. அதே போல மூன்று வயதில் கார்மன் அல்வாஸ் என்ற சிறுமி 96 கிலோ நிறையுடன் இருக்கிறார். இவர்களது எடைகளையெல்லாம் வீழ்த்திவிட்டார் ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த டீப்ரா! இப்போது இவரது எடை 136 கிலோ. இவரது தயார் வென்டி அமெரிக்க அரசின் வரித்திணைக்களத்தில் வேலை செய்தவர். டீப்ராவைப் பராமரிப்பதற்காக வீட்டிலேயே இருக்கிறார். பிறக்கும் போது 8 கிலோவாக இருந்த டீப்ரா கட கடவென வளர்ந்து இன்று உலகின் எடைகூடிய முதல் சிறுமியாகிவிட்டார். இச் சிறுமிக்கு இரண்டு விருப்பங்கள் உள்ளன வென்று அவர் தந்தை கூறுகிறார். ஒன்று உணவு மற்றது உயரமாக வரவேண்டுமென்பது. டீப்ராவின் தினசரி உணவு அட்டவணையைப் பார்த்தால் தலைசுற்றுகிறது. அதையும் அருகில் தருகிறோம். இவருடைய உணவிற்கு மட்டும் தனி வேலை செய்ய வேண்டியிருக்கிறது என்கிறார் தாயான வென்டி.

### டீப்ராவின் தினசரி உணவு

**காலை உணவு**

ஒன்பது முட்டைகள், ஒரு கட்டி சீஸ், அரைக்கிலோ உருளைக்கிழங்கு, அரைக்கிலோ பாண் ஒரு லீட்டர் பால்.

**இடைநேர உணவு**

பகல் பத்து மணியளவில் இரண்டு பெரிய கோழித்துடைகள், ஒரு கிலோ தானியம், அரைக் கிலோ அரிசிச்சோறு.

**இடைநேர உணவு**

பகல் பன்னிரண்டு மணிக்கு நாலுதுண்டு பண், ஒரு கிலோ சலாட்.

**மதிய உணவு**

சுமார் ஒரு மணிக்கு நாலு பெரிய ஹம்பேகர் அரைக்கிலோ உருளைக் கிழங்கு இரண்டு பால் பெனிக்.

**இடைநேர உணவு**

ஒரு லீட்டர் சூப், ஒரு கிலோ நூடில்ஸ், ஒன்பது உருண்டை அரைத்த இறைச்சிப் பொரியல்.

**இரவு உணவு**

நாலு துண்டு இறைச்சி, அரைக் கிலோ தானியம், 4 சுட்ட உருளைக்கிழங்கு, மூன்று பெரிய மிளகாய்கள்.

எப்போதும் ஒரே மாதிரி இவர் உண்பதில்லை. நாலுகிலோ அவித்த உணவு, ஒரு பக்கட் பிஸ்கட். ஒரு கிலோ ஐஸ் சாராசரியாக இவருக்குப் போதியதாகும்.

# தக்காளிப்பழத் திருநாள்

படத்தில் பெருந்தொகையான மக்கள் ஆரவாரப்படுவதைப் பார்த்துவிட்டு தேர்த் திருவிழா நடைபெறுகிறதா? என்று உங்களுக்குள் முடிவை ஏற்படுத்திவிடாதீர்கள். உலகின் அனேகமான நாடுகள் உழவுத் தொழிலுக்கு அதி முக்கியத்துவம் கொடுக்கின்றன. தமிழீழத்திலும் தமிழ்நாட்டிலும் தைப்பொங்கல் உழவர் திருநாளாக கொண்டாடப்படுகிறது. இதுபோல 26.08.98 அன்று ஸ்பெயின் நாட்டில் புனோல் நகரில் தக்காளிப்பழ நாள் கொண்டாடப்பட்டது. இருபது ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சுமார் 132 தொன்கள் எடையுள்ள தக்காளிப்பழங்களைப் பாவித்து வீதிகளில் இவ்விழாவை கொண்டாடி மகிழ்ந்தார்கள்.





படிப்பகம்

www.padippakam.com



# தேடலும்

மல்லீஸ்வரி ஆதவன்



**"அடியாத மாடு படியாது"**
**"அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவமாட்டான்"**
**"அடிக்கிற கைதான் அணைக்கும்"**

## விவாத அரங்கு

இதுபோன்ற பழமொழிகளைப் பார்க்கையில் "அடித்தல்" என்ற தொழிற்பாட்டின் மீது காலங்காலமாக எம் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை புலப்படுகிறது. குறிப்பாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்க்கிறோம் எனக் கூறிக் கொண்டு கையை ஓங்குவதும் பிரம்பைத் தூக்குவதும் எமது நாட்டில் சர்வசாதாரண நிகழ்ச்சிகளாகும். ஒரு உயிரை சித்திரவதை செய்ய எந்தவொரு ஜீவனுக்கும் உரிமை இல்லை என்பதை நிலைநிறுத்த பல சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ள புலம்பெயர் நாடுகளிலும் இந் நிகழ்ச்சி எம்மவர்களால் தொடரப்படுகிறது. இச் செயற்பாட்டுக்கு அவர்களால் சொல்லப்படும் காரணங்களையும் பிள்ளைகளை அடிப்பதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும், எம் பிள்ளைகளை நாம் விரும்பும் ஒழுக்கமுள்ளோராய் வளர்ப்பது எப்படி என்பது பற்றி சில கருத்துக்களையும் இம்முறை விவாத மேடைக்குக் கொண்டு வருகிறேன்.

முதலில் பிள்ளைகளை அடிக்கும் நோக்கத்திற்கான காரணங்களை எடுத்துப் பார்க்கின்.....

1– எங்களை எம் பெற்றோர் அடித்து வளர்த்தபடியால்தான் நாம் இன்றைக்கு நல்ல நிலையில், சமூகத்தில் கௌரவமுள்ளவர்களாய் இருக்கிறோம். அப்படித்தான் எங்கள் பிள்ளைகளும் இருக்கவேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்.

2– இந்த நாடுகளில் உள்ள பிள்ளைகளை அடித்து வளர்க்காத படியால்தான் அவர்கள் ஒருவரையும் மதிக்காமல் தான்தோன்றித்தனமாகத் திரிகின்றனர். அப்படி எங்கள் பிள்ளைகள் வளரக்கூடாது.

3– பிள்ளைகளை அடித்து வளர்ப்பது என்பது எங்கள் முன்னோர்களால் பின்பற்றப்பட்டு பரம்பரை பரம்பரையாக வந்த ஒரு விடயமாகும். இது எமது கலாச்சாரத்துடன் ஊறிவிட்டது. எனவே எங்கள் பிள்ளைகள் எங்கிருந்தாலும் எமது பாரம்பரிய வழக்கங்களை அறிந்திருத்தல் அவசியம்.

போன்ற கருத்துக்களே முக்கியமாக முன்வைக்கப்படுகின்றன. ஒரு உயிரைச் சித்திரவதை செய்வதாகக் கூறப்படும் மேற்குறிப்பிட்ட காரணங்கள் யாவும் தாம் செய்யும் காரியத்தை நியாயப்படுத்துவதற்காக சொல்லப்படுகின்றனவே தவிர இவற்றில் எவ்வித நியாயமும் இல்லை என்பதே என் கருத்து. சமூகத்தில் கௌரவமுள்ளவனாய் வாழ்வது என்பது அவனவன் திறமையைப் பொறுத்தது. மேலே முதலாவதாக கூறப்பட்டதை காரணமாகச் சொல்லும் பெற்றோர் எத்தனைபேர் "உண்மையான" கௌரவத்துடன் வாழ்கிறார்கள்? அந்நிய மண்ணில் வந்து இருந்து கொண்டு சமூக கௌரவத்தை எங்கே தேடுகிறார்கள் இவர்கள்? அடுத்து இரண்டாவது காரணத்தை எடுத்துக் கொண்டால் அடிக்காமல் வளர்க்கப்பட்ட எல்லாப் பிள்ளைகளுமே தான்தோன்றித்தனமாய்த் திரிவதுமில்லை, அடித்து வளர்க்கப்பட்ட எல்லாப் பிள்ளைகளும் நல்ல ஒழுக்கமுள்ளோராய் இருப்பதுமில்லை. தாம் செய்யும் காரியங்களில் தெளிவும், நல்லது கெட்டது என்ற பகுத்தறிவும் ஒரு பிள்ளைக்கு கிடையாத பட்சத்தில் அடித்துப் பயத்தைக் கொடுக்கும் வல்லமை பெற்ற பெற்றோர்களால் மேற்குறிப்பிட்ட அறிவை கொடுக்க முடியாத பட்சத்தில் தமிழ்ப்பிள்ளையானாலும் "தான்தோன்றித்தனமாகவே வளரும்" என்பது என் ஆழமான கருத்து.

பெற்றோர்களால் முன்வைக்கப்படும் அடுத்த நியாயத்தை எடுத்துக்கொண்டால் நாம் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் "எமது கலாச்சாரம்" என மார்தட்டிக் கொள்வதில் ஒருநாளும் நாம் பின்நிற்பதில்லை. வேற்று மண்ணில் வந்து இரண்டாந்தரப் பிரஜையாக இருந்துகொண்டு இப்படி மார்தட்டிக் கொள்வோரில் எத்தனைபேர் சொந்த மண்ணிலே எம் இனமே அழிந்துகொண்டிருப்பதைப் பற்றிச் சிந்திப்போராய் உள்ளனர்? அத்துடன் உயிர்வதை செய்வது என்னும் வன்முறைக்கு கலாச்சாரத்தைச் சாட்டாக வைப்பது என்பது மிகப்பெரிய துரோகமென்றே நான் கருதுகிறேன்.

மேற்கூறியன போன்ற பல காரணங்களைக் கூறிக்கொண்டு கண்



படிப்பகம்

www.padippakam.com



# தெளிவும்

மூடித்தனமாக பெற்றோர் பிள்ளை களை அடிப்பதால் பிள்ளைகளின் மனநிலை வெகுவாகப் பாதிக்கப் படுகிறது. பிள்ளைகளின் ஆழ்மன ங்களில் பெற்றோரைப் பற்றிய பயங்கரமான பதிவொன்று பதி யப்படுகிறது. இப் பதிவின் பிரதி பலிப்புகள் பிள்ளைகளின் நடை முறைப் பழக்கவழக்கங்களில் தெளி வாகத் தெரியும்.

– சுய சிந்தனையற்றோராயும் தன்னம்பிக்கையற்றோராயும் ஒதுங்கி வாழும் தன்மை கொண் டோராயும் பலவீனமுள்ளோரா யும் சில பிள்ளைகள் இருப்பார்கள்.

– வேறுசிலர் வீட்டில் மிகவும் ஒழுக்கமுள்ள நன்நடத்தை கொண்ட பிள்ளைகளாயும் பாடசாலை போன்ற வெளி இடங்களில் தம்மை சுதந்திரப் பறவைகளாய் எண்ணி கண்மூடித்தனமாய் நடந்துகொள் வார்கள். இவர்கள் வெளிச் சமூ கத்துடன் இணைந்து வாழும் தகு தியை இழந்துவிடுகிறார்கள்.

– சிறு வயதிலிருந்தே பெற்றோ ரின் கடுமையான கட்டுப்பாட்டிற் குள் வளர்க்கப்பட்டு வந்த பிள்ளை கள் தம்மை உணர்கிற வயது வந்த வுடன் நேரடியாகப் பெற்றோரை எதிர்ப்போராயும், பெற்றோரின் அன்புக்காகவும் அணைப்புக்காக வும் ஏங்குவோராயும் அது கிடைக் காது என்பதால் போதைவஸ்துப் போன்ற தீய பழக்கவழக்கங்களில் ஈடுபடுவோராயும் மாறுவதுமுண்டு.

பிள்ளைகள் வாழ்வில் ஏற்படக் கூடிய மேற்கூறப்பட்ட எதிர்விளைவு களைவிட புலம்பெயர் நாடுகளி லுள்ள பெற்றோர் பாதுகாவலர் உரிமைச் சட்டங்கள் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட விரும்பு கிறேன். பெற்றோர் பாதுகாவலர் உரிமையைப் பெறுவோர் பிள்ளை யை உடலியல் வன்முறை அல்லது வேறுவிதமாக ஊனப்படுத்தும் செயற்பாடுகளிலிருந்து பாதுகாக் கக் கடமைப்பட்டவராவர். இக் கடமையிலிருந்து பெற்றோர்கள் மீறினால்கூட அவர்களுக்கு எதி ராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்றும் இச்சட்டங்கள் கூறுகின் றன. பிள்ளைகளைப் பராமரிப்ப தற்காகக் கொடுக்கப்படும் பணத் தை மட்டும் சரியாக எண்ணி பதுக்கத்தெரிந்த எம்மவர்களுக்கு அதே சட்டங்கள்தான் பிள்ளை களை அடிக்கக்கூடாது என்றும் சொல்கிறது என்பது தெரிந்தும் தெரியாமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமே.

இனிப் பெற்றோர் சார்பில் பிள்ளைகளை வளர்ப்பதுபற்றி ஆராய்ந்தால் இது ஒரு சிக்கலான விடயமே. ஏனெனில் எல்லா வகை யிலும் தன்னிடம் வெகு இலகுவில் ஈர்த்துக்கொள்ளக்கூடிய சக்தி வாய்ந்த இப் புலம்பெயர் சூழலானது எங்கே தன் பிள்ளைகளையும் இழு த்துக்கொள்ளுமோ என பெற் றோர் கொள்ளும் அச்சம் நியாய மானதே. நல்லதோர் இளம் சமு தாயத்தைக் கட்டியெழுப்ப வேண் டிய பாரிய பொறுப்பை எம் பெற் றோர் எப்படி செவ்வனே செய்து முடிக்கலாம் என்பதற்கான சில ஆலோசனைகளை இங்கே குறிப் பிட விரும்புகின்றேன்.

– தாம் பற்றிக்கொண்டு பட ரக்கூடிய உறுதியான கொழுகொம் பாக பெற்றோர் இருக்கவேண்டும். பிள்ளைகள் செய்யும் ஒவ்வொரு பிழையையும் அமைதியாகவும் நிதானமாகவும் இருந்து அவர் களுக்கு சுட்டிக்காட்ட வேண்டும். இம் முறையை சிறு வயதிலிருந்தே அந்தந்த வயதுக்கேற்ற வகையில் கடைப்பிடித்து வந்தால் பிள்ளை களுக்கு பெற்றோர் மீது மதிப்பும் மரியாதையும் கூடுவதுடன் அவர் கள் சொல்வதை விளங்கிக்கொள் ளும் மனப்பக்குவமும் நாளடை வில் அடைந்துவிடுவார்கள்.

– பிள்ளைகள் தமது கருத்தைச் சொல்ல சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு விட யத்தை இட்டு காரணகாரியத்தை ஆராய்கையில் பிள்ளைகள் தமது கருத்தையும் சொல்லச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் பட்சத்தில் அவர் களது சுய சிந்தனை தன் பாட்டிலே வளர்க்கப்படும். பிள்ளைகள் தம க்கு மதிப்பளிக்கவேண்டுமென விரும்பும் பெற்றோர் பிள்ளைகளின் நல்ல கருத்துக்களுக்கும் மதிப்பளி ப்பதால் அது பிள்ளைகளின் தன் னம்பிக்கை வளர ஏதுவாகிறது.

– பிள்ளைகளுக்கும் பெற்றோ ருக்குமிடையிலான இடைவெளி குறைக்கப்பட்டு இரு சாராருக்கு மிடையே புரிந்துணர்வும், நம்பிக் கையும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பெற்றோர் தம் பிள்ளை களுக்கு ஹிட்லர்களாய் இல்லா மல் சிறந்த நண்பர்களாய், ஆலோச கர்களாய் வழிகாட்டிகளாய் இருப் பார்களேயானால் எந்தவொரு பிள்ளையும் தமக்கு விதிக்கப்பட்ட வரையறைகளை மீறிச் செயற் படாது. இந்தத் தெளிவை ஏற்படுத் தும் பணியில் ஒவ்வொரு பெற் றோரும் வெற்றியீட்டினால் பிள் ளைகளின் வாழ்வு வளம்பெறுவ துடன் எதிர்காலத்தில் சிறந்த இளைஞர் சமுதாயத்தை உருவா க்கிய பெருமையும் அவர்களுக்கே கிடைக்கும்.

எனவே, பெற்றோர்களே! பிள் ளைகளை நல்வழிப்படுத்த கை யைத் தூக்காதீர்கள்! "அன்பு" என்னும் ஆயுதத்தைப் பயன்படுத் துங்கள்! எம் தாய் மண்ணின் வாசனையை அவர்களுக்கு சிறு வயதிலிருந்தே சுவாசிக்கச் செய் யுங்கள். அதில் ஏற்படும் மனத் திருப்தியை அவர்களுக்கும் உணர ப்பண்ணுங்கள். இதை நீங்கள் ஒழுங்காகச் செய்தீர்களேயானால் உங்கள் பிள்ளைகள் நீங்கள் விரும் பும் நல்லொழுக்கமுள்ளவர்களாய் நிச்சயமாக வளர்வார்கள்.

♡



படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்காவில் நடைபெற்ற உலக ஆசிரியர் மாநாடு



20–ம் நூற்றாண்டில் உலகம் கடைப்பிடித்த கல்விக் கொள்கை மறு மதிப்பீட்டிற்குரியது. இன்று உலகம் முழுவதுமே கல்வியில் பெரும் ஏற்றத்தாழ்வு நிலவுகிறது. எல்லா உலக மனிதர்களுக்குமே பொதுவான கல்வியை இந்த நூற்றாண்டில் எம்மால் எட்டிப்பிடிக்கமுடியாமல் போய்விட்டது. ஏன் உலகில் இத்தனை பாரதூரமாக மனித உரிமைகள் மீறப்படுகின்றன. குறிப்பாக பெண்களும் பிள்ளைகளும் கீழ்மைப்படுத்தப்படுவதும், குழந்தைகள் வேலைக்கமர்த்தப்படுவதும், பல நாடுகளில் பிள்ளைகள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுதல் போன்ற அவலங்களை வென்றெடுக்கக்கூடிய பொதுமைக் கல்வியை எம்மால் எட்டிப்பிடிக்க முடியாமல் போனது ஏன்? இவைகள் அனைத்தும் "21–ம் நூற்றாண்டைக் கட்டியமைப்பதற்கான கல்வி" என்ற தலைப்பின் கீழ் அமெரிக்காவில் நடைபெற்ற உலக ஆசிரியர் மாநாட்டில் எழுப்பப்பட்ட முக்கிய கேள்விகளாகும்.

இந்த உலக ஆசிரியர் மாநாடு இவ்வாண்டு ஜூலை மாதப் பிற்பகுதியில் அமெரிக்காவின் தலைநகராகிய வாஷிங்டனில் நடைபெற்றது. மொத்தம் 100 நாடுகளில் இருந்து 1100 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இந்த மாநாடு ஐ. நா சபையின் ஆதரவுடன் நடைபெற்றது. ஐ.நா பொதுச் செயலாளர் கொபி. அனான் முதல் உலகின் பிரபலமான ஆட்சித் தலைவர்கள்

> **21_ம் நூற்றாண்டில் உலகம் முழுவதிற்கும் பொதுவான கணிதம், விஞ்ஞானம், மனித உரிமைகள் போன்ற பாடத்திட்டம்.**

பலரதும் வாழ்த்துச் செய்திகளுடன் ஆரம்பமாகிய மாநாடு ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. 21–ம் நூற்றாண்டைக் கட்டியமைக்க அவசியமான கல்விப் பணிகள் தொடர்பான 40 முக்கிய தீர்மானங்கள் இயற்றப்பட்டன. அதில் பல யோசனைகள் மிகவும் முக்கியமானவையாக இருந்தன.

இன்று உலகில் நிலவும் பல தீர்க்கமுடியாத பிரச்சினைகள் மதம், அரசியல் என்ற இரு முக்கிய தளங்களிலிருந்து உருவாகுகின்றன. இவைகளை அப்படியே பாடசாலைக் கல்விக்குள் எடுத்துச் செல்வது மிகவும் சங்கடமான பணியாக இருக்கிறது. எது சரி எது தவறு என்ற முடிவுகளைக் கூறுவதோ கடினமானது. இவைகளை மாணவர்கள் சரியாக அறிந்து வெற்றிகொள்வதற்கு மனித உரிமைகள், ஜனநாயகம் பற்றிய தெளிவை அவர்களிடையே கல்வியால் ஏற்படுத்தவேண்டும். இவ்விடயத்தில் யுனெஸ்கோ மேலும் மேலும் தன் உதவியை உலக நாடுகளிடையே விஸ்தரிக்கவேண்டுமென வற்புறுத்தினர்.

வாசிப்பு, எழுத்து, கணிதம், விஞ்ஞானம், தனிமனித ஆளுமையின் வளர்ச்சி, சூழலைப்பேணி வாழும் இயல்பு, ஒருவரை ஒருவர் மதித்தல், துவேசத்தைக் கைவிடல் போன்ற பண்புகளை வளர்க்கக் கூடிய பொதுக் கற்கையை உலக மக்களின் கைகளில் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

இவ்விடயங்களை மாணவர்கள் எட்டிப்பிடிக்க வேண்டுமானால் அவர்களை நல்ல முறையில் கற்பித்து சமூகத்திற்குள் வாழவிடுதல் அவசியம். இனி வரும் உலகில் குறிக்கப்பட்ட வயதுவரைதான் கட்டாயக் கல்வி என்ற நிலை மாறி "வாழும் வரை கல்வி" என்ற புதிய தீர்மானம் மனிதர்களிடையே



படிப்பகம்

www.padippakam.com



**இனி வாழும்வரை ஒவ்வொருவருக்கும் கட்டாய கல்வி. கல்வியில் ஏற்றத்தாழ்வு அகற்றப்படவேண்டும்.**


உறுதியாக நிலைநிறுத்தப்பட வேண்டும்.

போருக்குச் செலவாகும் பணம் யாவும் புத்தகங்களாகவும், கணணிகளாகவும் மாற்றமடைந்து பட்டி தொட்டியெல்லாம் பரவவிடப்படும் காலம் உருவாக உழைப்பது முக்கியம். உலகைப் பாதுகாக்கும் இராணுவம் என்பது ஆசிரியர்களாக, சமூக சேவையாளர்களாக மாறி நிற்கும் நிலையை எட்ட இவ்வுலகப் பொதுக்கல்வி உதவ வேண்டும். யாரிடமும் தங்கி நிற்காத சுயமாக நிற்கக்கூடிய நிலையை சகல மக்களும் அடைய கல்வியால் வழிசெய்தல் அவசியம். அரசுகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் அப்பால் பலம்கொண்ட சர்வதேச மாணவர், ஆசிரியர், பெற்றோர் கொண்ட உலக நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும். அந்த அறிவியல் நிறுவனம் 21–ம் நூற்றாண்டின் சகல அதிர்வுகளையும் கவனித்து அமைதியான உலகை உருவாக்க உதவவேண்டும்.

**உலகம் முழுவதிற்கும் பொதுவான பெற்றோர் ஆசிரியர் சங்கம்**

மேற்கண்ட விடயங்களை அடுத்த நூற்றாண்டில் எட்டியாக வேண்டும். இதற்கு ஐ.நா சபையின் உதவி கோரப்பட்டபோது ஐ.நா.சபை மட்டுமல்ல உலகிலுள்ள முக்கிய நிறுவனங்களான OECD, அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட பிரபல தொழிற் சங்கங்களும் இம் முயற்சிக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறினர். EI என்பது இந்த மாநாட்டின் சின்னம். இதன் கருத்து Education International என்பதாகும். மாநாட்டின் முடிவில் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் அரைமணி நேரம் உரையாற்றினார். “அடுத்த நூற்றாண்டிற்குரிய புதிய உலகத்தை ஆசிரியர்கள் கட்டாயமாக ஏற்படுத்துவார்கள். அதற்கு ஆண்டவன் அருளை வேண்டுகிறேன்” என்று குறிப்பிட்டார். யுத்தமில்லாத பூமியை ஆசிரியர்கள் உருவாக்குவார்களா? 21–ம் நூற்றாண்டு பதில் சொல்லும்.

# இப்படியும் ஒரு வழி இருக்கிறதா?




ஒரு விடயத்தைப் பற்றிய எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு ஊர்வலங்கள், பேரணிகள், உண்ணாவிரதங்கள், கூட்டங்கள் என்று பல வழிகளைக் கையாளக் காணும்போது 16.09.98 அன்று சுவிற்சர்லாந்து பாராளுமன்றக் கட்டிடம் அமைந்த பேர்ண் நகரில் பாராளுமன்றத்திற்கு முன்பாக 18,500 வரையிலான பைகளில் சோளன் பொரி நிரப்பப்பட்டு ஒழுங்காக வரிசையாக மிக அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. நீள வாகனங்களை சுவிற்சர்லாந்து நாட்டுக்குள் எவ்வாறு அனுமதிப்பது என்பது பற்றியே இவ் விஷேட பைகளில் குறித்து அடுக்கி வைத்திருந்தனர்.








படிப்பகம்

www.padippakam.com



# ஏழு மாதக் குழந்தை!

## தினசரி குடிப்பது ஆறு சிகரட்டுக்கள்!



வயிற்றில் இருக்கும்போது கூட லொய்ஸ் இப் பழக்கத்தைக் கை விடவில்லை. குழந்தை பிறந்த பின்னர் அது உறங்கமுடியாமல் தொடர்ந்து அழுது வந்தது. தாலாட்டுப் பாட்டைவிட தாயின் சிகரட் புகை பட்டதால்தான் அதனால் நன்றாக உறங்க முடிந்தது. இதன் பின்தான் புகை பிடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார் தாயார்.



குழந்தைகளுக்கு புகைபிடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவது தவறான காரியமாகும். ஆனால் லொய்ஸ் டிலோரின் என்ற இந்தத் தாய் தனது மகனான ரிம்மிக்கு இப்பொழுதே புகை பிடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி விட்டார். திருமதி. லொய்ஸ் தினசரி 60 சிகரட்டுக்களைக் குடிக்கும் பழக்கமுள்ளவர். பல வருடங்களாக இவரால் இதை மாற்றிக் கொள்ள முடியவில்லை. ரிம்மி அதன்பின்பே ரிம்மியால் நன்றாக உறங்க முடிந்திருக்கிறது. குழந்தையின் உடல் முழுவதும் நிக்கோற்றின் என்னும் புகைத்தல் வஸ்து கலந்திருப்பதால் இப்படி ஏற்பட்டிருக்கலாமென்கிறார் வைத்தியரான அல்பீற்றா.. எவ்வாறாயினும் புகை பிடிக்கும் குழந்தையைப் பராமரிக்க முடியாதென மறுத்து விட்டனர் பிள்ளைகள் பராமரிப்பு நிலையத்தினர்.

### மின்னலை ஈர்க்கும் மரம்

மின்னல் இருக்கும் சமயங்களில் மரங்களின் கீழே ஒதுங்குதல் கூடாது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். மரத்தில் மின்னல் தாக்கினால் மரத்தின் கீழே உள்ளவர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்ற காரணத்தினால் மரத்தின் கீழ் இருக்கக்கூடாது என்கிறார்கள். ஆனால் சீமை, ஆலமரம் (Oak Tree) சற்று வித்தியாசமான மரமாக கருதப்படுகிறது. இந்த மரத்தின் கீழ் ஒதுங்கும் எவரையும் மின்னல் தாக்குவதில்லை. இந்த மரத்தின் வேர்கள் வளைவின்றி நேராக பூமியின் அடியிலுள்ள நீருடன் இணைந்திருக்கின்றன. இதன் காரணமாக மின்னலால் ஏற்படும் மின் சக்தியை ஈர்த்து நீருக்கு அனுப்பி விடுவதால் மின்னல் ஏற்படும் சமயங்களில் சீமை ஆலமரத்தின் கீழ் ஒதுங்குபவர்களுக்கு மின்னலால் ஆபத்து ஏற்படுவதில்லை.

### காலிப் பத்திரம்

அவர்கள் அதிர்ஷ்டம் என்று கூறும் பாத்திரத்தை நீங்கள் என்னைச் சுமக்கச் செய்யவில்லை.

உங்கள் திருவடிகளை வணங்குவதை எனக்கு எளிதாக்கினீர்கள்.

புகழ், அதிகாரத்தால் எனக்கு இடையூறு செய்யவில்லை.

எதையும் சொந்தமாக்கிக் கொள்ளாததால் பெறும் சுதந்திரத்தையும், ஆனந்தத்தையும் தந்தீர்கள்.

உங்கள் கோயில் வாசலுக்கு எனது பயணம் எந்தச் சிரமமுமின்றி நடத்தச் செய்தீர்கள்.

எனது பாத்திரத்தை நீங்கள் காலியாக்கி வைத்தீர்கள்.

ஒருநாள் உங்கள் கருணைக் கைகளால் சுத்தப்படுத்துவதற்காக.

உங்கள் தோழமையைத் தேடித் தேடித் துவங்கிய பயணங்கள் கடைசியில் ஆசீர்வதிக்கப்படும்.

— கவிஞர் கண்ணதாசன்



படிப்பகம்

www.padippakam.com



# சரித்திரம் மறுபிறவி எடுக்கும்

## ஆட்டுக்குட்டிகளை ஓநாய்களிடம் பாதுகாக்கக் கொடுக்கின்றது துருவக் கரடி

இலங்கையர்கள் டென்மார்க்கிற்கு வருவது மிகவும் அரிதாகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கூட தமிழர்களைப் பலவந்தமாக டென்மார்க்கைவிட்டு வெளியேற்றும் நோக்குடன் டென்மார்க் அரசு சிறீலங்கா அரசுடன் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இவ் ஒப்பந்தத்தில் டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் நீல்ஸ் கெல்வி பீற்றர்சன் அவர்கள் கையெழுத்திட்ட போதும் இது உள் நாட்டு அமைச்சர் தோர்க்கில் சீமொன்சன் அவர்களின் கீழுள்ள உள்நாட்டு அமைச்சின் நிர்வாகத்தின் கீழேயே உள்ளது. இதுபற்றி தோர்க்கில் சீமொன்சன் அவர்களிடம் கேட்டபோது நெதர்லாந்து செய்த ஒப்பந்தம் போலவே நாங்களும் ஓர் ஒப்பந்தத்தை சிறீலங்காவுடன் செய்துள்ளோம் அவ்வளவுதான். நெதர்லாந்திலிருந்து போகின்ற தமிழர்களுக்கே இலங்கை அரசு பாதுகாப்பு கொடுப்பது போல் இங்கிருந்து செல்கின்ற தமிழர்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்கும் என்றுகூறி தமிழர்களிற்கு தானும் தனது அரசாங்கமும் செய்கின்ற துரோகத்தை நியாயப்படுத்துகிறார் தோர்க்கில் சீமொன்சன்.

புள்ளி விபரங்களின் படி 1997–ம் ஆண்டு டென்மார்க்கிற்கு 191 இலங்கையர்கள் மாத்திரமே வந்தனர். இதில் சில சிங்களவர்களும் அடங்குவர். ஆனால் 1997–ம் ஆண்டு டென்மார்க்கில் அடைக்கலம் மறுக்கப்பட்டவர்கள் எப்படியாவது இழுத்தடித்தாலும் மனிதாபிமான அடிப்படையில் டென்மார்க்கினர் அடைக்கலம் வழங்குவார்கள் என்று அங்கலாய்ப்புடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் வாயில் மண்ணை அள்ளிக் கொட்டுவதுடன் கொழும்பில் தமிழர்களுக்கு எந்தவித பிரச்சினைகளும் இல்லை என்று கூறி ஈழத்தில் எமது உரிமைக்காகப் போராடும் போராட்டத்தை தனது வியாபார சுயநல இலாபங்களிற்காக டென்மார்க் மாசுபடுத்துகிறது.

மனித உரிமைகள் என்று வழமையாகத் தொண்டை கிழியக் கத்துகின்ற டென்மார்க் இன்று இலங்கையில் இவ்வளவு அநியாயங்கள் தமிழர்களிற்கு நடப்பது தெரிந்தும்கூட அல்லலுறும் தமிழர்களை குருட்டுக் கண்ணால் பார்த்துவிட்டு வழக்கமான தனது வணிக பாணியில் தமிழர்களின் துன்பத்தில் இலாபமடைகின்றது என்றே கூறலாம்.

தனது சுய லாபங்களிற்காக காரியக் குருடாக இருப்பது ஒன்றும் புதிதல்ல என்று சரித்திரத்தினைப் புரட்டிப் பார்க்கும் பொழுது தெரிகின்றது. அண்மையில் சோமாலியர்களை சோமாலியாவிற்கு கட்டாயமாக அனுப்பும் சுய நோக்குடன் அங்கு அராஜகம் செய்யும் குழுத் தலைவர்களுக்கு பணம் கொடுத்து இங்கிருந்து அனுப்பும் சோமாலியர்களை ஏற்றுக் கொள்ளுமாறு டென்மார்க்கின் வெளிநாட்டவர் திணைக்களம் ஒரு ஒப்பந்தம் செய்தது. இவ் ஒப்பந்தத்தின் பின்னணிகள் அம்பலமாக்கப்பட்டதும் டென்மார்க்கிலுள்ள எதிர்க்கட்சிகள் மத்தியில் இது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இத்தனை காலமும் கொழும்பில் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் ஒரு சாட்டாக வைத்துக் கொண்டு இங்கிருந்து அனுப்பும் அகதிகளை உயர்ஸ்தானிகராலயம் பார்த்துக்கொள்ளும் என்ற புத்திசாதுரியமற்ற தன்மையில் அனுப்பிக்கொண்டிருந்தது. அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் மேற்கு நாடுகளுக்கு சார்பாகவே இத்தனை காலமும் இலங்கையில் நிலமை நன்றாக இருக்கிறது, தமிழர்களிற்குப் பிரச்சினை இல்லை என்று அடிக்கடி அறிக்கைகள் வெளியிட்டது. இவ் அறிக்கையை விடுபவர்கள் யார்? இவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர்களே. தங்களின் சொந்த இலாபங்களிற்காக அநியாயங்கள் நடந்துகொண்



படிப்பகம்

www.padippakam.com



டிருந்தாலும் அமைதி நிலவுகின்றது என்ற பொய்யான அறிக்கைகளை விடும் பொய்யர்கள். இவர்களைத்தாம் நாம் வெள்ளையர்களிற்கு வெள்ளை மனது என்று நம்பிக்கொண்டிருக்கின்றோம். வழமையாகத் தமக்குச்சார்பாக இருக்கும் அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தைக்கூட ஒரு வார்த்தை கேளாமல் டென்மார்க் நேரடியாக இலங்கையுடன் இவ் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது என்பதில் ஏதோ பின்தளக் காரணமுள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது. (ஆட்டுக்குட்டிகளை ஓணாய்களிடம் பாதுகாக்கக் கொடுக்கின்றது இந்த துருவக் கரடி)

லண்டனிலுள்ள அனைத்துலக பொதுமன்னிப்புச் சபை இவ் ஒப்பந்தம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. இச் சபையில் கடமையாற்றுபவரும் இலங்கை நிலவரம் பற்றி ஆய்வு செய்பவருமாகிய இங்கிரித் மசாஜ் அவர்கள் இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்தும் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுவதும், கொலைசெய்யப்படுவதும், காணாமல் போவதும் சாதாரணமாக நடந்துகொண்டிருக்கும் இவ் வேளையில் இவ் ஒப்பந்தம் செய்தது பிழை என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

டென்மார்க் அகதிகள் உதவிச் சபையும் இவ் ஒப்பந்தம் தொடர்பாக கண்டனம் தெரிவித்துள்ளது. அகதிகள் உதவிச் சபையின் பிரதிநிதி லூயிச ஹெரால்க் இது குறித்து கூறுகையில் ஐ. நா அகதிகள் உயர்ஸ்தானிகராலயத்தை கலந்து பேசாமல் இவ் ஒப்பந்தம் செய்தது பிழை என்று கூறுகிறார். தமிழர்களிற்குப் பாதுகாப்புத் தருகின்றோம் என்று சந்திரிகா அரசு கூறுகின்றதை வைத்துக்கொண்டு உண்மையிலேயே அடைக்கலம் பெறுவதற்கு உரிமையுள்ள தமிழர்களையும் இதே சாட்டாக சிறீலங்காவிற்கு திருப்பி அனுப்பி விடுவார்களோ என்று அச்சப்படுகிறார் லூயிச ஹெரால்க்.

**டென்மார்க் மட்டுமல்ல ஐரோப்பாவே எம்மவரைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருக்கிறது. எங்களிற்கு ஒரு சுதந்திர நாடு வேண்டும் என்ற விடயத்தினை காலம் எங்களுக்கு வலுவாக உணர்த்திக் கொண்டிருக்கின்றது. இதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஹிட்லர் மறுபிறவி எடுக்கும் காலம் தொலைவில் இல்லை. சரித்திரம் மறுபிறவி எடுக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.**

எது எப்படி இருப்பினும் ஐரோப்பிய நாடுகளிற்கு தமிழர்கள் தொடர்ந்து வருவது ஐரோப்பியர்களுக்கு பிடிக்காத விடமாகத்தான் இருக்கும். டென்மார்க்கிற்கு தமிழர்கள் வருவதும் டென்மார்க் அரசிற்கு பிடிக்கவில்லை. ஏனென்று கேள்வி கேட்டால் பல விடயங்களை நாங்கள் அனுமானித்துக் கொள்ளலாம். 1986–ல் வந்து அகதி அந்தஸ்துப் பெற்று இருந்தவர்களை 1987–ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்திய இராணுவம் இலங்கைக்குள் காலடி வைத்துக் கொடுமைகள் செய்துகொண்டிருந்த பொழுதும் தமிழர்களைத் திருப்பி அனுப்ப நடவடிக்கைகள் எடுத்ததுடன் இங்கு அகதி அந்தஸ்துப் பெற்றவர்களின் குடும்பங்களை டென்மார்க்கிற்கு அழைப்பதற்கு உரிமை இருந்தும் உரிமையைத் திருட்டுத் தனமாக மறுத்ததுடன் குடும்ப இணைப்பு செய்வதாயின் கொழும்பிற்குச் சென்று உங்கள் குடும்பங்களுடன் இணையுங்கள் என்று வியாக்கியானங்களும் பேசிக்கொண்டிருந்தனர் அன்றைய ஆட்சியிலிருந்தவர்கள். அதன் விளைவை அவர்கள் அன்றே அனுபவித்தனர். டெனிஷ் மக்களால் அவ் அரசாங்கம் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டது.

டென்மார்க் மட்டுமல்ல ஐரோப்பாவே எம்மவரைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருக்கிறது. எங்களிற்கு ஒரு சுதந்திர நாடு வேண்டும் என்ற விடயத்தினை காலம் எங்களுக்கு வலுவாக உணர்த்திக் கொண்டிருக்கின்றது. இதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ஹிட்லர் மறுபிறவி எடுக்கும் காலம் தொலைவில் இல்லை. சரித்திரம் மறுபிறவி எடுக்கும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

**- ஏகாம்பரம்**

## வால்வெள்ளி

பிரமாண்டமான பாறைகள் சிறுசிறு கற்கள் பனிக்கட்டிகள், உலோகத் துகள்கள், தூசுக்கள் வாயுக்கள் இவைதாம் வால் நட்சத்திரங்களில் உள்ளன. வால் நட்சத்திரம் சூரியனை நெருங்க நெருங்க அதிலுள்ள தூசுக்கள் வாயுக்கள் பின்னுக்கு தள்ளப்படுகின்றன. இவையே வால்போல் ஒளிவிடுகின்றன. இந்த வால் எப்போதும் சூரியனுக்கு எதிர்த்திசையில்தான் இருக்கும். வால் நட்சத்திரம் பூமிக்கு அருகில் வரும்போது அதிலிருந்து சில கற்கள் உதிர்வதுண்டு. அவைதான் "விண் வீழ் கற்கள்" இவற்றால் பூமிக்கு எந்தவித ஆபத்தும் இல்லை. 1994–ல் ஜூலையில் "சூமேக்கர் லெலி" என்ற வால் நட்சத்திரம் வியாழனில் மோதி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 1996–ம் ஆண்டு மார்ச் இறுதியில் "கியாகுடாவே" என்ற வால் வெள்ளி எமது கண்களுக்கு தென்பட்டது. தற்போது வானில் தென்பட்ட பூமியை நெருங்கும் வால் நட்சத்திரத்தின் பெயர் "ஹேல் பொப்" ஆகும்.



படிப்பகம்

www.padippakam.com





# சிவப்பு மனிதன்

இவருடைய பெயர் கிறெஸ் பிரவுண். ஆனால் இவருக் சிவப்பு நிறம்தான் விருப்பம். வீட்டிலும் பாவனைப்படுத்தும் பொருட்கள் எல்லாமே சிவப்பில் தான் வைத்திருக்கிறார். இவருடைய உடைகள், கதிரை, கட்டில், சாப்பாட்டுக் கோப்பை, சப்பாத்து, குளிக்கும் சவர்க்காரம், கார் உட்பட எல்லாமே சிவப்புத்தான். இந்தச் சிவப்பு மனிதர் ஓர் நிறுவனத்தின் பகுதித் தலைவர். பொறியியலாளரும்கூட. எனினும் தனது பெயர் பிரவுண் என்ற நிறத்தை குறிப்பதாய் இருப்பதுதான் கவலை என்கிறார்.





# பந்து வடிவில் சதுரங்கப் பலகை

சதுரங்க ஆட்டம் ஆசியாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். சதுர வடிவிலான இந்த வகையான சதுரங்கப் பலகைகளைப் பார்த்துப் பார்த்து மனித குலம் பல நூற்றாண்டுகளைக் கழித்துவிட்டது. இந்தப் பழைய பலகைகளைத் தொடர்ந்தும் பார்ப்பதால் மனித மூளை இனிப் புதிதாக எதையும் கண்டுபிடிக்கமுடியாது. உலகப் புகழ் பெற்ற சதுரங்க ஆட்டக்காரரான 'கஸ்பரோவ்' ஐ.பி.எம் கணணியிடம் சதுரங்க ஆட்டத்தில் தோல்வியடைந்தபின்னர் இந்தப் பந்து வடிவிலான சதுரங்கப் பலகையை வடிவமைத்திருக்கிறார். சதுரங்க விளையாட்டுக் கழகங்களின் விஷேட ஆலோசகர் வில்லியம் கிறா மொல்ற் என்னும் இங்கிலாந்துக் காரர். இதை வட்டமாகச் சுற்றமுடியும். இரண்டு பலகைகள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கும். ஒரு பக்கத்தில் கட்டையை நகர்த்தினால் அதேபோல மறு பக்கத்திலும் நகரும். இதற்கேற்ப உட்பகுதியில் சில இணைப்புக்கள் உண்டு. இதிலிருந்து கிடைக்கக்கூடிய புத்தம் புதுக் கற்பனைகளால் மறுபடியும் ஐ.பி.எம் கொம்பியூற்றரை வெல்ல முடியுமென்று நம்புகிறார்கள். தனது மகன் உதைபந்தாட்டப் பந்தொன்றில் சதுரங்கம் விளையாடியதைப் பார்த்த போது தமக்கு இப்படியொரு கற்பனை வந்ததாகக் கூறுகிறார் வில்லியம். இதன் விலை 140 பவுண்ஸ் ஆகும்.







படிப்பகம்

www.padippakam.com





# டயானா வஞ்சித்தாரா?

இளவரசி டயானாவின் அகால மரணமும் அதற்குக் காரணமானவர்கள் யார் என்பதும் இன்று வரை வெளியாகவில்லை. டயானா மரணமடைந்து ஒரு வருடமாகியும் கொலைக்கான காரணம் மர்மமாகவே உள்ளது. உலகத்தில் பெரும்பாலானவர்களால் நேசிக்கப்பட்டவரும் பிரித்தானிய அரச குடும்பத்தால் ஒதுக்கப்பட்டவருமான டயானாவின் மரணம் பலரது மனங்களைப் பாதிக்கத்தான் செய்தது.

பிரிட்டனின் உளவுப்படையான MI 6–ன் ஏஜன்டுகள் அல்லது இஸ்ரேலிய உளவுப்படையான மொஸாட்டின் ஏஜன்டுகள்தான் டயானா கொல்லப்பட்டபோது அவ்விடத்திலிருந்து தலைமறைவாகிவிட்ட பியட் காரில் சென்றார்கள் என்று ஒரே குரலில் ஓலமிடுகின்றன சில மத்திய கிழக்கு நாட்டுப் பத்திரிகைகள். டயானாவின் கார் விபத்தில் உண்மையில் இன்னொரு காரும் சம்பந்தப்பட்டதா? அப்படியானால் அந்தக் கார் எங்கே? இந்தக் கேள்விக்கான விடையைக் கண்டுபிடித்தால் டயானாவின் மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய முடியும் என கூறப்படுகின்றது.

டயானாவின் முயற்சியால் உலகெங்கும் கண்ணிவெடித்தடை விரைவில் வரக்கூடிய வாய்ப்பு இருந்தது. இதனால் கண்ணிவெடித் தொழிற்சாலைகள் இழுத்து மூடப்படும் அபாயம் ஏற் பட்டது. எந்த வல்லரசுகளும் கண்ணிவெடியை தடைசெய்ய தாமாக உண்மையான மனதுடன் முன்வராத நேரத்தில் டயானாவின் முயற்சி பல ஆயுத உற்பத்தியாளர்களுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அதனால்தான் கண்ணிவெடி உற்பத்தியாளர்கள் டயானாவை தீர்த்துக் கட்ட எண்ணியிருக்கலாம்.



அரச குடும்பத்திடமிருந்து மீண்டும் மீண்டும் டயானாவிற்கு ஏன் எதிர்ப்பு வந்தது? பெயர் களங்கமடைந்த ஒரு எகிப்து நாட்டு வியாபாரியின் மகனுடன் மத்தியதரைக் கடல் பிரதேசத்தில் காதல் விளையாட்டுக்களில் ஈடுபட்டது பல பத்திரிகைகளிலும் வெளிவந்ததால் மகாராணியாரை வெட்கித் திக்குமுக்காடச் செய்தார். இச் சம்பவம் டயானா மீது இருந்த நற்பெயருக்கு களங்கமாக வந்தது. டயானாவுடன் மரணமடைந்த





படிப்பகம்

www.padippakam.com





# வஞ்சிக்கப்பட்டாரா?

அந்த எகிப்திய கோடீஸ்வர டோடியுடன் ஜோடியாக கோடைகாலத்தில் மூன்று தடவைகள் விடுமுறைக்குச் சென்று வந்தார். மத்தியதரைக் கடலில் உல்லாசமாக விடுமுறையைக் கழிக்க டோடியின் தந்தையார் தன் உல்லாசக் கப்பலை காதல் ஜோடிக்கு கொடுத்து உதவினார். அங்கு பத்திரிகையாளர்களின் தொல்லை தாங்கமுடியாத டோடி–டயானா ஜோடி, டோடியின் தந்தையார் கொடுத்துதவிய சொந்த உலங்கு வானூர்தியில் பிரான்சுக்குப் பறந்தனர். பிரான்சில் டோடியின் தந்தையின் சொகுசு ஹோட்டலில் தங்கியிருக்கையில் பத்திரிகையாளர்களின் தொல்லை தொடர்ந்தது. தொல்லை தாங்க முடியாததால் இருவரும் இரு நாட்கள் ஹோட்டல் அறையை விட்டு வெளியே வரவில்லை. ஹோட்டலில் உல்லாசமாக பொழுதைக் கழித்துவிட்டு ஹோட்டலைவிட்டு தந்தையாரின் காரில் வெளியே புறப்பட்டபோதே டயானாவின் உயிரைக் காவுகொண்ட அந்த விபத்து நடந்தது.



டயானாவினதும் டோடியினதும் உடல்கள் இங்கிலாந்திற்கு பயணமாகின. திருகுர்ரானிலிருந்து எடுக்கப்பட்ட வாசகங்கள் கொண்ட எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட கறுப்புத் துணியால் மூடப்பட்ட டோடியின் பூதவுடல் பிணப் பெட்டி அல்பயாத்துக்குச் சொந்த மான ஜெற் விமானத்தில் உடனடியாகவே இங்கிலாந்திற்கு எடுத்துச் செல்லப் பட்டது.

டயானாவின் மரணச் செய்தியை அறிந்த சார்ள்ஸ் உடனடியாக ஸ்கொட்லாந்திலிருந்து புறப்பட்டு பிரான்ஸ் சென்றடைந்தார். கணவன் என்ற அந்தஸ்து இல்லாவிட்டாலும்கூட சார்ள்ஸ் தனது கடமையை செவ்வனே முடித்திருந்தார். டயானாவின் பூதவுடல் கூட விஷேட விமானம் மூலமே இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது. அழகான அந்த உடல் பிரேத பரிசோதனை என்ற பேரில் கீறிக் கிழிக்கப்பட்டது. 80–களின் ஆரம்பத்தில் உலகையே கலங்கவைத்தது சார்ள்ஸ் டயானா திருமணம். 17 ஆண்டுகளில் உலகத்தை மீண்டும்





படிப்பகம்

www.padippakam.com







ஒருமுறை கலங்கவைத்தார் டயானா தனது மரணத்தின் மூலம். சார்ள்ஸ் டயானா விவாகரத்து நிச்சயமாகவே மீண்டும் சேரமுடியாத பிரிவாகிவிட்டது.

இளவரசர் சார்ள்ஸ், டயானாவை திருமணம் செய்யக் காரணமாக இருந்தவர் யார்? டயானாவின் இரு சகோதரிகளில் ஒருவரான சேரா மக்கோர்க்குடேல் சீமாட்டியே சார்ள்ஸின் பழைய சிநேகிதி. இந்த தொடர்பின் மூலமே டயானா சார்ள்சிற்கு அறிமுகமானார். திருமணமாகி சில ஆண்டுகள் வாழ்ந்த சார்ள்ஸ் டயானாவின் வாழ்க்கையில் விரிசல் ஏற்பட்டதற்கு அவர்களுக்கிருந்த தகாத வெளி உறவுகளே காரணமாக இருந்தது. டயானாவுடனான திருமண வாழ்வில் மனக் குமுறல்களை அரண்மனைச் சுவர்களுக்குள் வைத்துக் கொண்டு வாழ்ந்துவந்தவர் சார்ள்ஸ். விவாகரத்துப் பற்றிய பேச்சை அவரது உயிருக்குயிரான நண்பர்கள் எடுத்தால் "வேண்டாம் என் மனைவி என்னை விரும்பி என்றாவது ஒருநாள் திரும்பி வருவாள்" என்பார். காத்திருந்தவன் காத்திருந்தான். அவள் வந்தாள்! வந்த கோலமோ......

டயானாவின் மரணம் சம்பந்தமாக ஆங்கிலத்தில் எண்ணற்ற நூல்கள் வெளியாகிவிட்டன. தமிழில் அதிகம் வெளிவரவில்லை. இப்போது லண்டனிலிருந்து டாக்டர் க. இந்திரகுமார் எழுதிய நூலை தமிழகத்திலிருந்து மணிமேகலைப் பிரசுரத்தினர் வெளியிட்டுள்ளனர். மொத்தம் 21 தலைப்புக்களின் கீழ் 280 பக்கங்களில் விறுவிறுப்பும் சுவையும் கலந்து காலத்தின் தேவையைப் புரிந்துகொண்டு வெளியிடப்பட்டுள்ளது டயானாவின் வாழ்க்கைபற்றி பதிவாகிய நூல் "டயானா வஞ்சித்தாரா? வஞ்சிக்கப்பட்டாரா?"

# வானொலியில் தொலைபேசி

**வா**கனங்களை ஓடியபடியே தொலைபேசியை இயக்குவது சிரமமான காரியம்; விபத்துக்களும் ஏற்படலாம். மேற்கண்ட குறைபாட்டை நீக்குவதுபோல வந்துள்ளது புதியதோர் மொபைல் தொலைபேசி. ஸ்டியரிங்கிலிருந்து கைகளை எடுக்காமலே பெருவிரலினால் குறியீட்டுப் பொத்தானை எழுத்தினாலே போதும் தொலைபேசி இயங்கும். வாகனத்திலுள்ள வானொலிப் பெட்டியினூடாக மேற்கண்ட தொலைபேசி செயற்படுகிறது. ஸ்டியரிங்கிலே இதற்கான சிறு கருவி பொருத்தப்பட்டிருப்பதே இதன் விஷேட அம்சமாகும்.






படிப்பகம்

www.padippakam.com



பொருளாதாரம், அபிவிருத்தி, வேலை வாய்ப்பு, உல்லாசபயணிகள், அரசியல் என பல்வேறு துறைகளில் மிகவும் பின்னடைவு ஏற்பட்டு தலை தப்பினால் போதும் என்ற நிலையில் தத்தளித்து காணப்படும் சிறீலங்கா நாட்டில், கிரிக்கட் விளையாட்டு மட்டும் முன்னேறியிருக்கிறது. பெரும்பான்மை சிங்கள வீரர்களை மட்டும் கொண்டு விளையாடும் சிறீலங்கா அணி கண்டியில் பிறந்து கொழும்பை வசிப்பிடமாக கொண்ட முத்தையா முரளிதரன் என்னும் ஓப் ஸ்பின் (OFF SPIN) முறையில் சுழல்பந்து வீசக்கூடிய தமிழ்வீரனையும் அணியில் இணைத்துக் கொண்டது. உலக நாடுகளின் கண்களுக்கு ஒரு தமிழ் வீரனை உதாரணமாக்கி, போலிச் சமாதானம், சமவுரிமைப் பிரச்சினைகளுக்காக இணைக்கப்



# சிறீலங்கா அணியின் தனித்துவமான தமிழ்வீரன்



பட்ட சிங்கள பேரினத்தின் ஒரு தந்திர திட்டமா? அன்றி முரளிதரனின் திறமையா? என்ற பலமான ஊகங்களுக்கு மத்தியில் சிறீலங்கா அணியில் இடம்பிடித்த முரளிதரன் அணியின் வெற்றிக்காக பல தடவைகள் கைகொடுத்து உதவியுள்ளார். சென்ற ஆண்டு இங்கிலாந்துக்கு விஜயம் செய்த சிறீலங்கா அணி ஒருநாள் போட்டி தொடரையும் ஓவல் டெஸ்ட் போட்டியையும் வெற்றி கொள்வதற்கு கைகொடுத்தவர் முரளிதரன் என்பதை பலரும் அறிந்திருப்பீர்கள். சிறீலங்காவின் கிரிக்கட்



படிப்பகம்

www.padippakam.com





சரித்திரத்தில் ஒரு சிறந்த பந்து வீச்சை அமைத்து 200–க்கு மேற்பட்ட விக்கட்டுக்களை வீழ்த்திய ஒரு வீரன் முரளிதரன் மட்டுமே. ஓவல் டெஸ்டில் முதல் இனிங்சில் 7 விக்கட்டுகளையும் இரண்டாவது இனிங்சில் 9 விக்கட்டுக்களுமாக மொத்தம் 220 ஓட்டங்களுக்கு 16 விக்கட்டுகளை வீழ்த்தி சாதனை படைத்தார். உலகின் தலைசிறந்த சுழல்பந்து வீச்சாளர்கள் என்றால் வோர்ன், கும்பிளே, முரளிதரன் மூவரையுமே சுட்டிக்காட்ட முடியும். இம் மூவரில் முரளிதரன் மட்டுமே OFF SPIN முறையில் பந்து வீசுபவர். மற்ற இருவரும் LEG SPIN முறையில் பந்து வீசுபவர்கள். ஆனாலும் உலக தரப்படுத்தலில் சிறந்த பந்து வீச்சாளர் பட்டியலில் முதல் ஐந்து இடங்களுக்குள் இடம் பிடித்த ஒரே ஒரு சுழல்பந்து வீச்சாளர் முரளிதரன் என்பதும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது சாலச்சிறந்தது.

**உலகப் பட்டியலில்:**

1– டொனால்ட்,
2– அம்புறோஸ்,
3– மக்கிறாத்,
4– முரளிதரன்,
5– பிஃறேசர்

ஆகியோர் முதல் ஐந்து இடங்களைப் பெற்றவர்களாவர். இவை தவிர ஓவல் மைதானத்தில் இரண்டாவது இனிங்சில் 9 விக்கட்டுக்களுக்காக 65 ஓட்டங்களை கொடுத்த முரளிதரனின் பந்து வீச்சு, அதி சிறந்த சிறீலங்கா அணியின் வீச்சாகவும் அமைகிறது.

1– லாகர் 10/53
2– லொக்மன் 9/28
3– லாகர் 9/37
4– காட்லி 9/52
5– அத்துல்காதர் 9/56
6– மல்கம் 9/57
7– முரளிதரன் 9/65

இவையே முதல் 7 சிறந்த பந்து வீச்சாளர்கள் வரிசை. இவ்வகையான சிறப்புத் திறமைகளுடன் தனித்துவமாக ஒரு தமிழ்வீரன் போயும் போயும் இனவாத சிங்கள பேரின அணியில் இடம்பெறுவதையிட்டு தமிழினம் வெக்கித் தலைகுனிவதா? அல்லது சிங்கள வீரர்களை மூட்டைகட்டி முடக்கி விட்டு தனியொரு தமிழனாய் தரணியிலே சாதனை படைப்பதையிட்டு பெருமை கொள்வதா?

பொன். தாமோதரம்



படிப்பகம்

www.padippakam.com


# பொது அறிவுப் போட்டி இல: 6

பாலம் சஞ்சிகை நிறுவனத்தினரால்நடாத்தப்படும் அறிவுப் போட்டி இல—6. ஒவ்வொரு போட்டியிலும் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். தொடர்ந்து நடைபெறும் 10 அறிவுப்போட்டிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் வாசகர்களுக்கு பாலம் சஞ்சிகையினரால் சிறந்த பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும். அதிகூடிய புள்ளிகளை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெறும் பட்சத்தில் குலுக்கல் முறையில் வாசகர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்று ஒரு மாதத்திற்குள் விடைகளை எழுதி எமக்கு அனுப்பி வைக்கவும். விடைகளை கீழே உள்ள படிவத்திலேயே நிரப்பி அனுப்பவும்.

## கேள்விகள்:

1– தாஜ்மகால் இந்தியாவில் எந்த இடத்திலுள்ளது?

2– பென்சிலின் மருந்தை முதலில் கண்டுபிடித்தவர் யார்?

3– உலகிலே அதிக மொழிகளில் அச்சிடப்பட்ட புத்தகம் எது?

4– தியாகி திலீபன் அகிம்சைப் போர் புரிந்து தமிழினத்துக்காக உயிர் நீத்த நாள் எது?

5– இரும்புச் சீமாட்டி என்று அழைக்கப்பட்ட பெண்மணி யார்? (இவர் ஒரு நாட்டின் முன்னாள் பிரதமர்).

### பொது அறிவுப் போட்டி இல:6

பாலம் சஞ்சிகை கிடைக்கப்பெற்ற திகதி:– ..............................

விடைகள்:

1 ..................................................................

2 ..................................................................

3 ..................................................................

4 ..................................................................

5 ..................................................................

பெயர்:– ...............................................

முகவரி:– ...............................................

...............................................

...............................................

தொலைபேசி இல.:– ............................



படிப்பகம்

www.padippakam.com



# கலையும் மக்களும்

# வீணை

இந்திய நாட்டின் இசைக் கருவிகளுக்கெல்லாம் அரசி என்று அழைக்கப்படுவது வீணை. இசையின் பல நுட்பங்களையும், தத்துவங்களையும் இந்தக் கருவி மூலமாக தெளிவாக வெளிப்படுத்தலாம். மொழிகலவாத் தனி இசை (absolute music)–யின் மேன்மையை வீணை வழியாக நாம் உணரலாம். பண்டைக் காலந்தொட்டு வீணை வாசிக்கப்பட்டு வந்தாலும், 17–ம் நூற்றாண்டில்தான் அது தற்போதைய உருவத்தை அடைந்தது; தஞ்சையை ஆண்ட ரகுநாத மன்னரின் காலத்தில் நிகழ்ந்தது.


நரம்புக் கருவிகளுள் வீணை மீட்டுக் கருவிகளின் வகையைச் சேர்ந்தது. வீணையில் 3 1/2 ஸ்தாயிகள் வாசிக்கலாம். 4 தந்திகள் வாசிப்பதற்கும், 3 தந்திகள் சுருதிக்காவும் தாளத்திற்காகவும் அமைந்துள்ளன. வாசிக்கும் தந்திகளுக்காகக் குடத்தின் மேல் ஒரு குதிரையும், தாள–சுருதி தந்திகளுக்காக மற்றொரு குதிரை பக்கத்திலும் இருக்கும், பலாமரத்தினால் வீணை செய்யப்படுகிறது.

நான்கு வாசிப்பு தந்திகளின் பெயர்கள்: 1. சாரணி (ச), 2. பஞ்சமம் (ப), 3. மந்தரம் (ச), 4. அனுமந்தரம் (ப).


மூன்று தாள– சுருதித் தந்திகளின் பெயர்கள்: 1. பக்க சாரணி (ச), 2. பக்கபஞ்சமம் (ப), 3. ஹெச்சுசாரணி (ச்).

ஒரே மரத்துண்டிலிருந்து தண்டியும் குடமும் குடைந்து செய்யப்பட்டுள்ள வீணைக்கு ஏகாண்ட வீணை என்று பெயர்.

வீணையின் நாதம் சுவை தான். அதை தூக்கிக் கொண்டு போவதுதான் பெருங்கஷ்டம். கச்சேரிக்கு வெளியூர் போகும்போது கொண்டு செல்வதற்கு சுலபமாக தற்போது புதிய வீணையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். வீணையைப் பிரித்து பெட்டிக்குள் வைத்து வயலின், கிதார் மாதிரி கொண்டு செல்லலாம். கீதா என்ற பெண்மணி கடந்தவருடம் சென்னை திருவல்லிக்கேணியிலிருக்கும் 'சப்தஸ்வரா மியூசிக்கல்ஸ்' உரிமை



யாளர் நட்வர்லால் அவர்களிடம் இந்த வீணையை செய்வதற்கு நாடியிருக்கிறார். வீணை தயாரிப்பதில் நிபுணரான திருச்சியைச் சேர்ந்த பழனியை உதவிக்கு அழைத்திருக்கிறார் நட்வர்லால் அவர்கள். கச்சிதமாக டிசைன் போட்டுக் கொடுக்க அதை சட்டென்று புரிந்துகொண்டு இரண்டே மாதத்திற்குள் திறமையாக வேலையை முடித்திருக்கிறார் பழனி. இதற்கு முன்பு ஏற்கனவே ஒரு முறை வீணையின் வெவ்வேறு பகுதிகளை கழட்டி மாட்டும் வகையில் ஒரு முயற்சியில் இறங்கி வெற்றிபெறவில்லை. இம் முறை அவர்கள் அதை நிறைவேற்றிவிட்டார்கள்.






படிப்பகம்

www.padippakam.com





சப்தஸ்வரா தயாரித்துள்ள வீணை சாதாரண வீணையை விட அளவில் சற்று சிறியது. ஒரே மரத் துண்டில் கடைந்த 'ஏகாண்ட வீணை' எனப்படும் இதன் குடத்தை இரண்டாகப் பிரித்து எடுத்துவிடலாம். குடத்தின் அடியிலுள்ள ஸ்குருவை கழட்டிவிட்டால் அரை வட்டமாக பாத்திரம் போல தனியே வந்துவிடும். வீணையின் பக்க வாட்டில் இருக்கும் ஏழு உருண்டை கட்டைகளுக்கு (பிரடை) பதிலாக கித்தாரில் போடப்பட்டிருப்பதுபோல் சின்னதாக ஏழு மெஷின் ஹெட்ஸ் போட்டிருக்கிறார்கள். அடுத்து ஏழு தந்தி கம்பிகளையும் ஜாக்கிரதையாக சேர்க்கும் மணிப்பகுதி எனப்படும் குடத்தின் மேல் பகுதியில் ஏழு ஸ்க்ரு உள்ளது. புதிதாக தந்தி போடுவது மற்றும் தந்தியை அட்ஜஸ் செய்வதை இந்த ஸ்க்ருக்கள் சுபமாக்குமாம். யாழ் பகுதியை தனியாகப் பிரித்து எடுப்பதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை அதிகம் இல்லை. இந்தியன் விலை பதினைந்தாயிரம் ரூபாய் மட்டும்தான்.

ஆனால் ஐரோப்பிய நாடுகளுக்கு இன்னமும் வரவில்லை.

_ பைரவி

## தைப்பொங்கல்

தமிழர்களின் பாரம்பரிய விழாக்களில் ஒன்று தைப்பொங்கல். தை மாதம் பிறந்துவிட்டால் கொண்டாட்டம்தான். புத்தாடை உடுத்து புதிய பானையில் சூரியனுக்காக பொங்கல் செய்து படைக்கப்படுகின்றது. பண்டைக்காலங்களில் உழவர் திருநாள் என்று வழங்கப்பட்டது. இன்றும் அனைத்து உழைவர்களும் சூரியனுக்காக பொங்கல் செய்து படைத்து வழிபடுகின்றனர். இம்முறை 14—ம் திகதி ஐரோப்பாவிலும், 15—ம் திகதி இலங்கை, இந்தியாவிலும் பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டது. முதல் நாள் சூரியனுக்கும் அடுத்தநாள் பசுவிற்கும் பொங்கல் பொங்கி படைப்பார்கள்.

### பசியின் கொடுமையால் வீதியில் உயிர் நீத்த

# சினிமாக் கவிஞர் மாயவநாதன்!

ஏழ்மையும் புலமையும் ஒன்றாக இருக்கும் என்பது தமிழில் நீண்டகாலமாகப் பேசப்பட்டுவரும் விடயமாகும். வறுமையில் விழுந்து உயிர் விட்டவர் பாரதி என்பது அனைவரும் அறிந்தது. பாரதியார். சினிமாவிற்குப் பாடல் எழுதியவரல்ல; ஆனால் தமிழ்ச் சினிமா அவரது பாடல்களைப் பயன்படுத்தியுள்ளது. சினிமாவினால் கிடைக்கும் வருவாய் இன்று கவிஞர்களின் இலட்சிய வாள்களைப் பிடுங்கி எறிந்தாலும் அவர்களின் கைகளில் ரூபாய்த் தாள்களைக் கொடுக்கத் தவறுவதில்லை. அப்படியிருந்தும் பாரதிபோல வறுமையால் மடிந்த சினிமாக் கவிஞரே மாயவநாதன்.

'கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு காரியம் நடக்கட்டும் தொடர்ந்துவிடு' என்ற பந்தபாசம் திரைப்படப் பாடலை எழுதியவரே மாயவநாதன். இது தவிர 'இதழ் மொட்டு விரிந்திட முத்து விளைந்திடும் சித்திரப் பெண் பாவை' 'நித்தம் நித்தம் மாறுகின்றது எத்தனையோ' 'காவிரிப் பெண்ணே வாழ்க உந்தன் காதலன் சோழ வேந்தனும் வாழ்க' போன்ற பாடல்களெல்லாம் மாயவநாதனுடையவைதான். கண்ணதாசன் திரையுலகில் கொடிகட்டிப் பறந்த காலத்திலே இவர் திரையுலகில் புகுந்து பாட்டெழுதி, கண்ணதாசனின் தனியுரிமைக் கோட்டையையே ஆட்டம் காணச் செய்தார். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பூலாங்குளம் இவரது ஊர். 1962—ல் சினிமாவில் பாட்டெழுத வந்தார். 'வானும் நிலமும் வீடு காற்றும் மழையும் உணவு காலும் கையும் ஆமை ஏழை வாழ்வு சிம்பிள்' என்று பாடிய மாநவநாதன் 50 —க்கு மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ளார். அவை எதுவுமே கோடை போகவில்லை. எனினும் இவரை வறுமை விட்டு வைக்கவில்லை பசியோடு மயங்கி தெருவிலே விழுந்து செத்துப்போனார். தேடுவோரற்று அவர் சடலம் தெருவில் கிடந்தாலும் இன்றும் அவர் பாடல்கள் வானலைகளில் எழுச்சியுடன் வலம்வரக் காண்கிறோம்.

★



படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை

# கறிவேப்பிலை

பொ. கருணாகரமூர்த்தி

வேலைக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு அந்த கட்டிட ஒப்பந்தக் கம்பனியின் படிகளை இறங்கிய அந்தக் காலை நிச்சயமாக வாழ்வின் மறக்கமுடியாத பல காலைப் பொழுதுகளில் ஒன்றுதான்.

என்னை நேர்முகம் செய்த அந்தக் கம்பனியின் உரிமையாளனும் இயக்குனனுமாகிய ஜேர்மன் காரருக்கு என்னைவிடச் சில அகவைகள் குறைவாகக்கூட இருக்கலாம். மழுங்க ஷேவ் பண்ணிய முகத்தில் ஒரு சீதேவிக்களை. "கொழும்பில் கட்டிடக் கலைத் துறையில் பட வரைஞனாக 10 ஆண்டுகள் பணி செய்த அனுபவம் உண்டு" என்றேன்.

"உனக்கு வசதிப்படுமென்றால் அடுத்த திங்களே வேலையை ஆரம்பிக்கலாம்" என்றான்.

மூன்றே மாதத்தில் என் கடின உழைப்பு, திறமை, விசுவாசம் மற்றும் பல் துறைகளிலும் எனக்கிருந்த ஆர்வம் என்பன பிடித்துப் போக அஸெஸர் அல்லது எஸ்டிமேட்டர் என்று சொல்லக்கூடிய ஒரு பதவியில் போட்டார்கள். அந்த ஆண்டில் கம்பனி 10 மில்லியன் ஜேர்மன் மார்க்குகள் தேவையென மதிப்பிட்டிருந்த தொடர்மாடிக் கட்டிமொன்றை ஏழு மில்லியனுக்குள் முடித்துக் காட்டினேன்.

"படு கில்லாடிப் பயலா இருக்கிறீயே நீ" என்று பாராட்டிய அவன் அன்றே ஆர்க்கிரெக்ட்.

பொறியியலாளர்களுக்கு நிகராய் என் சம்பளத்தை உயர்த்தியது காரியாலயத்தில் பலரது புருவங்களையும் மேலே உயர்த்தியது.

விருப்புக்குரிய பொஸ்– சமத்துப் பிள்ளை என்று இருந்த எமது உறவு, கொலிடே பரடைஸ் என்று என்றைக்கு சிறீலங்காவுக்குப் போய் வந்தேனோ அன்றிலிருந்து விரிசல் கண்டது.

– எங்கெல்லாம் சுழி ஓடலாம்– என்று என்னிடம் விபரம் கேட்டுப் போன பிரான் ஓட்சிசன் சிலிண்டரை எங்கேயோ ஓரமாக வைத்து விட்டு பெண்களைத் தூண்டில் போடுவதில்தான் நேரத்தைப் போக்கி இருந்தார்.



விடுமுறையால் திரும்பியதும் காரியாலயத்தில் எல்லோருக்கும் கைகொடுத்துக் கொண்டுவரும் போது பிரானைப் பார்த்து "எப்படியிருந்தது பரடைஸ்" என்றேன்.

கட்டைவிரலையும், சுட்டு விரலையும் குவித்து "சுப்பர்" என்றவன் அத்துடன் நிறுத்தாமல்

"ஒரு 500 மார்க் போதும்... ஒரு வாரத்திற்கே காலடியில் கிடப்பாளவை..." என்று அனைவர் முன்னிலையிலும் கொழும்புச் சாக்கடையைக் கலக்கினான். அதைக் கேட்டவர்கள் எல்லோரும் பல்வேறு தினுசுகளில் சிரித்தார்கள்.

உள்ளூரக் கோபம் வந்து தகிக்க மனது வருத்தத்தில் தோய்ந்தது.

மறு நாள் கோப்பி இடைவேளையின் போது கேட்டேன்.

"சிறீலங்காவில் போர் நிலைமைகள் எப்படி இருக்கு... ஏதாவது அறிந்தாயா?"

"என்ன போரா... சிறீலங்காவிலா... யார் சொன்னது? அப்படி ஒரு சத்தமும் என் காதில் விழவில்லையே... நான் கேட்டதெல்லாம் அம்மே... அம்மே... அம்மே.... அம்மேதான்" கண்களை ஒருமாதிரி மேலே சொருகிக் கொண்டு திரும்பத் திரும்ப முனகிக் காட்டினான்.

சாக்கடையில் தோய்த்த விளக்குமாற்றை என் முகத்துக்கு முன்னே பிடித்து ஆட்டுவதை அறியாமல் பேசிக்கொண்டே போனவன் இடையில் "நல்ல நாடு வீணே சீரழியுது" என்றான்.

என்ன அர்த்தத்தில் சொல்கிறான் என்று புரியவில்லை. கேட்டேன்.

"எப்படி?"

"உலகத்தில ஒவ்வொருத்தரும் தன்னுடைய மொழியால, மதத்தால, இல்லை வேறொரு அடை



படிப்பகம்

www.padippakam.com



யாளத்தால் தனி நாடு கேட்கத் தலைப்பட்டால் அரசுகளின் எண்ணிக்கைதான் அதிகரித்துக் கொண்டு போகுமே தவிர பிரச்சினைகள் எதுவும் தீர்ந்தபாடாக இருக்காது... உங்களின் தனி நாட்டுக்கான போராட்டம் அர்த்தமற்றது... குழந்தைத் தனமானது."

இவனுக்கு அங்கே யாரோ மூளைச் சலவை செய்துவிட்டிருக்கிறார்கள்.

"நீயும் ஒரு மாதமென்றாலும் ஒரு தமிழனாய் வாழ்ந்து பார்த்தால்தான் உன்னால் எங்கள் பிரச்சினையும் முழுப் பரிமாணத்தையும் உணரமுடியும். எங்கள் போராட்டத்தில் உள்ள நியாயத்தைப் புரியமுடியும்"

"போராட்டம்தான் நியாயமென்றால் அங்கேயே நின்று போராடவேண்டியதுதானே... இங்கே ஏன் வாறிங்க?" அவனது பாஷையிலேயே கத்தினான்.

"உனது வீடு திடீரென தீப்பற்றிக் கொண்டால் முதலில் நீ என்ன செய்வாய்?"

மௌனமாய் இருந்தான்.

"எங்கள் நாடு தீப்பற்றிக்கொண்டு விட்டது. இன்றைக்கு 3 இலட்சம் மக்கள் தங்கள் குழந்தைகளுடன் கூரைகளை இழந்து காட்டிலும் மரத்தின் கீழும் நிற்கிறார்களே ஐயனே" நானும் தாழ்மையுடன் அவனைப் பார்த்துக் கூறினேன். அவனும் விடுவதாக இல்லை.

"பிரச்சினை எப்படித்தான் இருந்தாலும் அங்கு நின்று முகம் கொடுத்திருக்க வேண்டுமே தவிர இங்கு வருவது தப்பு. பிரச்சினையால்தான் வந்தோமென்று விவாதிப்பது அதைவிடவும் தப்பு" அவன் என்னுடனான விவாதத்தை முடிப்பதாக இல்லை.

"வரலாற்றில் நிகழ்வுகள் சொல்லிக்கொண்டு இடம்பெறுவதில்லை... இரண்டாம் உலகப்போரின் உக்கிரம் தாங்காது எத்தனைபேர் நாட்டைவிட்டு ஓடினீர்கள் என்று தெரியுமா...?"

பதில் சொல்லமுடியாது சில நிமிடங்கள் முழித்தவன்

"நான் போருக்குப் பின்னால் பிறந்தவன்... போரின் போது நடந்த சம்பவங்கள் எதையும் நான் பார்த்ததில்லை... நான் ஜேர்மன் காரன் எனக்கே போரைப்பற்றி சொல்லுகிறாயா?" சற்று கோபமாக சொல்ல முயற்சித்தான்.

"நான் ஜேர்மன் காரன் நீ வெளிநாட்டவன், நான் வெள்ளையன் நீ நிறம் கொண்டவன், நான் வேறு வர்க்கம் நீ வேறு வர்க்கம் என்று பேசும் பார்வைக்குறுக்கம் கொண்டவர்களுக்கு எனது மொழியில் வேறு பெயர்... இவர்களுடன் விவாதிப்பதில் எனக்கு இஸ்டமில்லை"

விவாதம் இப்படிச் சூடாகும் என்று எண்ணியிருக்கமாட்டான். திடுமென முகம் இருண்டு கன்றிப் போனது.

என்னதான் இருந்தாலும் இவர்களுக்கு தாங்கள் ஜேர்மனியர்கள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுவார்கள்.



தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்ள அவ்வப்போ என்னதான் முதுகில் தடவியே கொடுத்தாலும் இவர்கள் மெலிதான ஒரு இடவெளி விட்டே பழகுவதை ஒரு வெளிநாட்டுக் காரனால் உணருவதில் சிரமம் இருக்காது.

அந்த விவாதத்தின் பின்னால் அவ் இடைவெளி இன்னும் அதிகமாகியதை உணரமுடிந்தது.

வேலை அதிகம் இருக்கும் நாட்களாயின் முன்பெல்லாம் வாசல் வரை வந்து அழைத்துப் போவான். இப்போது நான் வருவதையே கண்டுகொள்ளாதிருந்தான்.

"காலை வணக்கம்" சொன்னாலும் வேறு யாருக்கோ சொல்வது போலவே சொன்னான்.

முந்திய அரட்டைகள், கிண்டல்கள் எல்லாம் நின்று போனது.

இரண்டு நாட்கள் கழித்து காரியாலயக் காரைப்பாவனைக்கு எடுக்கும்போதும் திரும்பக் கொண்டு வந்து விடும்போதும் நேரம் பதிவு செய்யவேண்டுமென்று எனக்கு மட்டும் தனிச் சுற்று வந்தது.

அதுவரை பொறியியலாளர் தரத்திலுள்ள வேறு எவரும் அப்படி நேரப் பதிவு செய்தல் வழக்கம் இல்லை. நான் காரியாலயக் காரைப் பாவிப்பதை தவிர்த்தேன்.

என்னதான் பணத்தைக் கொட்டிக் கொடுத்தாலும் ஒரு பகலெல்லாம் பொழுதைச் செலவிடும் காரியாலயத்தில் பாகுபாடும், பழக்கத்தில் சுமூகமும் இல்லை என்றால்... போகப்போக வேண்டாப் பெண்டாட்டி கதையாகி விடும்.

ஒரு நாள் அவனது அறையுள் கொம்பனி புதிதாக கட்டுவதற்கு ஒப்பந்தம் செய்திருந்த பாடசாலைக் கட்டிடம் ஒன்றில் அவர்கள் விரும்பியபடிக்கு சில மாற்றங்கள் செய்யவேண்டியிருந்ததால் அது பற்றிய சில சந்தேகங்களைத் தெளிவிப்பதற்காக செல்லவேண்டியிருந்தது. பேச்சிலேயே "நான் நின்று கொள்கிறேன்" என்றேன்.

அவனுக்குச் சற்றே உள்ளூர அதிர்ச்சி. அதைக் காட்டிக்கொள்ளாதபடி "நான் உன்னை நிற்கும் படி எதுவும் சொல்லவில்லையே..." என்றான்.

"இல்லை... நின்றுவிடுவதே நல்லது" என்றேன்.

"நீ விரும்பினால் தொடர்ந்தும் வேலை செய்யலாம்... அது உனது முடிவு... ஆனால் நீ போய் விடுவதால் நான் கொம்பனியை இழுத்து மூடிவிடுவேன் என்று மட்டிலும் எண்ணிவிடாதே" சற்று இறுமாப்புடன் கூறினான்.

மூளையில் யாரோ துருப்பிடித்த ஊசியைச் சொருகுவது போல் இருந்தது.

"AUF WIEDER SEHEN" (GOOD BYE)

அன்றைய நாள் எனது வாழ்வில் மறக்கமுடியாத நாளாகிவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு இலக்கிய மேதையும் அவரது மனைவியும்

எண்பத்திரண்டு வயதான ஒரு கிழவர், தனது மனைவியின் நச்சரிப்பும், தொல்லையும் தாங்கமுடியாது நள்ளிரவில் வீட்டைவிட்டு ஓடுகின்றார். வழியிலே நோயும் பலவீனமும் முற்றிவிட ஒரு சின்ன புகையிரத நிலைய அதிபருடைய வீட்டில் மரணப் படுக்கையில் வீழ்கின்றார். கணவன் தன்னைவிட்டுச் சென்றுவிட்டார் என்பதைத் தாங்கிக்கொள்ள இயலாத அவருடைய 64 வயதான மனைவி முதலில் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றாள். பின்னர் ஒரு விஷேட ரயிலை அமர்த்திக் கொண்டு அவரிடத்திற்கு ஓடுகின்றாள். கையுடன் அவர் விரும்பி உபயோகிக்கும் தலையணையையும் மறவாமல் எடுத்துச் செல்கின்றாள். ஆனால் அங்கு கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு அவருடன் இல்லறம் நடாத்திய அவளுக்குத் தன் கணவன் அருகில் செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றது. அவள் எடுத்துச் சென்ற தலையணைக்கு மட்டும் உள்ளே செல்லும் பாக்கியம் கிடைக்கின்றது. படப்பிடிப்பாளர்கள், பத்திரிகையாளர்கள், ரசிகர்கள் என அலைமோதிய அந்த புகையிரத நிலையத்தில் அவள் மட்டும் பைத்தியம் பிடித்தவள் போல் அழுது கொண்டும் அரற்றிக்கொண்டும் அங்குமிங்கும் அலைகின்றாள்.


லியோ டால்ஸ்டாய்

★★★

அங்கு மரணப் படுக்கையில் கிடப்பவர் ஒரு சாதாரண கிழவர் அல்ல! உலக இலக்கியங்களில் உன்னத இடத்தை வகிக்கும் புகழ் பெற்ற “போரும் அமைதியும்”, “அனா கரினீனா” என்ற நாவல்களையும் பல சிறந்த படைப்புக் களையும் எழுதிய ரஷ்ய எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய் தான் இந்தக் கிழவர். ரஷ்யப் புரட்சி வெடிப்பதற்கு 7 ஆண்டுகள் முன்னதாக ஒரு ஒக்டோபர் மாதக் கடைக்கூற்றில் இது நிகழ்கின்றது.

வாசுகியைப் போன்றதொரு மனையாள் வாய்த்திருக்காவிடின் வள்ளுவரினால் திருக்குறளை எழுதியிருக்கமுடியாது என்பர். இப்போ பித்துப் பிடித்தவளாய் அலையும் டால்ஸ் டாயின் மனைவி ஸோபியா இல்லாவிட்டால் டால்ஸ் டாயினால் ரஷ்ய நாட்டின் ஆத்மாவையும், அழகையும், நெப்போலியனை அடிபணிய வைத்த வீரத்தையும், கலையழகோடு சொல்லும் காவியமான போரும் அமைதியும் என்ற நாவலை எழுதியிருக்க முடியுமா என எண்ணத் தோன்று கின்றது.

கணவன் எழுதிய இந்த நாவலின் கையெழுத்துப் பிரதியை திருத்தி, பிரதி செய்து, செவ்வைப் படுத்தி மறு பிரதி எடுத்து ஸோபியா எழுதிய பக்கங்களைக் கணக்கிட்டால் அப் பெரிய நாவலை ஏழு தடவைகள் எழுதி முடித்ததற்குச் சமன் எனக் காணப்பட்டுள்ளது. இந் நாவலை 3 தடவைகள் மாற்றி எழுதிய டால்ஸ் டாயின் கையெழுத்து சில சமயங்களில் அவருக்கே புரிவதில்லை. அத்தனையையும் படித்துத் திருத்தி பிரதி எடுத்து ஸோபியா உதவியிருக்காவிடின் டால்ஸ் டாயினால் இந்த நாவலை எழுதி முடித்திருக்க இயலாது என அவருடைய குணவியல்புகளை ஆராய்ந்த அறிஞர்



படிப்பகம்

www.padippakam.com



சிலர் சொல்வ துண்டு.

"எவராவது தற்கொலை செய்வ தானால் அது நான்தான்.... நிச்சய மாக ஸோபியா அல்ல!... அவளிட மிருந்து விடுதலை பெறவேண்டும் என்பதே இப்போது எனக்கிருக் கும் ஒரேயொரு ஆசை!..." என் பதுதான், மனைவியின் தற்கொலை முயற்சி பற்றி அறிந்த டால்ஸ் டாயின் முதல் கூற்றாக இருந்தது. ஆனால் உடனடியாகவே "நான் வீட்டைவிட்டு வந்ததன் காரணம் நான் உன்னை நேசிக்கவில்லை என்பதனாலல்ல... நான் உன்னை நேசிக்கின்றேன்.... என் ஆத்மா உனக்காக இரங்குகின்றது... ஆனால் உன்னைவிட்டு ஓடுவதைத் தவிர வேறு எதையுமே என்னால் செய்ய முடியவில்லை... ஆண்ட வன் உனக்கு உதவுவாராக... எழுந்த மானத்தில் உணர்ச்சி வசப் பட்டு வீசி எறிவதற்கு வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டுப் பொருளல்ல... அவ்வாறு செயவ தற்கு எமக்கு உரிமை கிடை யாது!..." என ஒரு கடிதத்தை ஸோபியாவிற்கு அனுப்பி வைக் கின்றார்.

"ஒரு ஆணுக்கும் பெண்ணுக் கும் உள்ள உறவில், மிக ஆள மானதும், மிக அந்தரங்கமானது மான விஷயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும் என் றொரு மாயையை, வாசகர்கள் மனதில் கதாசிரியர்கள் உருவாக்கு கின்றனர். பிறர் சரிதம் எழுதுப வர்களும் பத்திரிகைக்காரரும் தாம் எழுது பவை அனைத்துமே உண்மையானது என்றதொரு பிரமையை ஏற் படுத்தி வாசகரின் விறுவிறுப்பையும் சுவாரசியத்தை யும் அதிகரிக் கச் செய்கின்றனர்... ஆனால் இல்வாழ்வில் ஆண் பெண் உறவு என்பது இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு சங்கதி அல்ல!" என் பது டால்ஸ் டாயின் சரிதத்தை எழுதிய பிரபல ஆங்கி நாவலாசி ரியர் ஏ.என். வில்ஸன் அவர்களின் கருத்தாகும்.

டால்ஸ் டாயின் புகழ் பெற்ற நவீனமான "அனா கரினீனா" ஒரு மகத்தான காதல் காவியம் எனச் சொல்லப்படுகின்றது. டால்ஸ் டாய் தம்பதிகளின் இல்லற வாழ் க்கையும் மிகச் சுவாரசியமான நாவல் ஒன்றுக்கு கருவாக அமையக் கூடிய கதையாகத் தோன்றுகின் றது. எழுத்தாளர் டால்ஸ் டாய் தனது வாழ்வில் 63 வருடங்கள் நாட்குறிப்பு எழுதியவர். மரணம் வரை தொடர்ந்த இப் பழக்கத் தினால் அவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றிப் பிறர் அதிகமாக அறியமுடிகின்றது. அவர் மட்டு மல்ல அவருடைய மனைவி ஸோபியா கூட திருமண மான காலத்திலிருந்து நாட்குறிப்பு எழுதி வந்ததனால் இவர்களு டைய அந்தரங்க வாழ்வு ஒரு திறந்த புத்தகமாகவே உள்ளது. பிற்காலத் தில் இத் தம்பதிகள் ஒருவரை ஒருவர் படு மோசமாகத் தாக்கிக் கொள்வதற்கு அவரவர் எழுதிய நாட்குறிப்புக்கள் ஆயுத மாகப் பயன்படுத்தப்பட்டதை "டயறி யுத்தம்" என்றே ஆய்வா ளர்கள் குறிப்பிடுவதுண்டு.

**20 ஆண்டுகள் மனம்போன போக்கில் வரம்பு மீறிய வாழ்க்கை வாழ்ந்த டால்ஸ்டாயை வசதி படைத்த உயர் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த இளம் பெண்ணான ஸோ பியா எதற்காக மணக்கச் சம்மதித் தாள் என்ற வினா எழுவது இயல்பானதே.**

இன்னும் எழுதப்படாத இந்த நாவலின் கதாநாயக, நாயகியின் மண வாழ்வின் ஆரம்பத்திலேயே நாட்குறிப்பொன்று மிக முக்கிய

> பதினைந்து வருட
> அந்நிய வாழ்வில் நான்,
> பதினைந்து வருட போராட்ட
> வாழ்வில் பதினைந்தாயிரம்
> போராளிகளின் வீரமரணம்
> ஒரு நாட்டினைப் பெற
> போய் மடிந்தனர் அவர்.
> ஒரு நாட்டின் பிரஜா உரிமை பெற
> அலைக்கழிந்தேன் நான்.
> எனக்குப் பிரஜா உரிமை
> கிடைத்துவிட்டது.
> அவர்களுக்கு நாடு
> கிடைக்கவில்லை.
> எனக்குக் கிடைத்த பிரஜா
> உரிமையையும்
> என்னைப் போல் அலைக்கழியும்
> பலநூறு அகதிகளையும்
> என்ன செய்யலாம்.
>
> ஆதவன்

இடம்பெறுகின்றது.

34 வயதிலேதான் திருமணத்தை நினைத்த டால்ஸ் டாய் அந்த வயதிலேயே ரஷ்யாவின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் என்ற புகழைப் பெற்றிருந்தார். திருமண த்திற்கு சில வாரங்களுக்கு முன்பு 18 வயதான மணப்பெண் ஸோபியா விடம் இவர் தனது நாட்குறிப் பைக் கொடுத்துப் படிக்கும்படி வற்புறுத்துகின்றார். இதுவரை மது, மாது, சூது என்ற விஷயங் களில் மிகவும் கட்டுப்பாடற்ற கொள்கையைக் கடைப்பிடித்த தனது கடந்த காலம் அவளுக்குத் தெரியவேண்டும் என அவர் எண்ணியிருக்கலாம்.

அக் குறிப்பில் இரண்டொரு மாதத்திற்கு முன்புதான் டால்ஸ் டாய் தனது பண்ணையில் உள்ள அஸ்கினியா என்ற குடியானவப் பெண்ணையிட்டு எழுதும்போது "முன்னெப்போதும் இல்லாத வகை யில் நான் காதல் வயப்பட்டுள் ளேன்" என்பதையும் ஸோபியா படிக்க நேரிடுகின்றது. திருமண



படிப்பகம்

www.padippakam.com



மாகி டால்ஸ் டாயின் கிராமத்திற்கு வாழச் சென்றபோது அங்கு அஸ் கினியாவையும் அவளுக்கு டால்ஸ் டாய் கொடுத்த குழந்தை யையும் கண்ட ஸோபியா மனம் கொதித் துப் போகின்றாள். "பொறாமை யால் என்னை நானே கொன்று விடுவேன் போலிருக்கின்றது!... பிள்ளை மட்டும் இல்லாதிருந்தால் அவளை நான் கொன்றிருப்பேன்" எனத் தன் நாட்குறிப்பில் எழுது கின்றாள்.

20 ஆண்டுகள் மனம்போன போக்கில் வரம்பு மீறிய வாழ்க்கை வாழ்ந்த டால்ஸ் டாயை வசதி படைத்த உயர் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த இளம் பெண்ணான ஸோ பியா எதற்காக மணக்கச் சம்மதித் தாள் என்ற வினா எழுவது இயல் பானதே.

அவரது நாட்குறிப்பை படித்த தன் பின் டால்ஸ் டாயைச் சந்திக் கையில் ஸோபியாவினால் தன் அழுகையைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. உனது கண்ணீருக் குக் காரணம் உன்னால் என்னை மன்னிக்கமுடியாதபடியினாலா? என டால்ஸ் டாய் கேட்டபோது "நான் மன்னிக்கின்றேன்... ஆனால் இது மிகவும் கொடுமையாக உள்ளதே!" என அவள் அழுகின் றாள். வாழ்க்கையின் இறுதி வரை ஸோபியாவினால் நடந்தவற்றை மறக்கமுடியாமல் இருப்பதை அறி கையில் அவள் டால்ஸ் டாயை மன்னிக்கவே இல்லை என்பது புலனாகின்றது. மெய்யான மன் னிப்பு எனில் எதற்காக மன்னித் தோம் என்ற நினைவே இருக்க முடியாதல்லவா?

18 வயதான ஸோபியாவுக்கு புகழ் பெற்றதொரு எழுத்தாளன் தன்னைக் காதலிப்பதும் அவன் தன் மிக அந்தரங்கமான விஷயங் களைத் தனக்கு மட்டுமே வெளிப் படுத்தியதும் மிகவும் அரிய, பெரிய விஷயமாகத் தோன்றி யிருக்க வேண்டும். நாடு புகழும் ஓர் எழுத்தாளனுடைய அந்தரங்க நாட்குறிப்பு உட்பட அனைத்துப் படைப்புக்களின் முதல் வாசகி யாக இருக்கும் பாக்கியம் தன் ஒருத்திக்கு மட்டுமே கிடைத்தது, டால்ஸ் டாயின் குணவியல்பு களை ஆதார பூர்வமாகத் தெரிந்து கொண்ட வேதனையை விட இன்பத்தையும் பெருமிதத்தையும் கொடுத்திருக்க வேண்டும். சிறப் பான ஒன்றை அடையவேண்டு மானால் அதற்கு ஒப்பான ஏதோ ஒன்றை இழந்துதான் ஆகவேண் டும் என்ற எழுதா விதி செயற் படுவதை யாரால்தான் தடுக்க முடியும்!

யாருமே மிருகமாக இருக்கக் கூடாது. அத்துடன் தன்னிடம் இல்லாத மேன்மையான குணங்கள் பிறரிடம் இருக்க வேண்டும் எனப் போதிக்கக் கூடாது. இவருடைய படைப்புக்களைப் படிக்கும் வாசகர்களுக்கு இவருடைய சொந்த வாழ்க்கை எப்படியான தென ஒரு சிறிதளவு தெரிந்தால் போதும், இவரை உயரத் தூக்கி வைத்து ஆராதிக்கும் அவர்கள் தூக்கி எறிந்துவிடுவார்கள்.

டால்ஸ் டாயின் உன்னத இலக்கியங்கள் யாவற்றையும் பிரதி எடுத்து அவற்றை மறுபிரதி செய் வது மட்டுமல்லாது அவரைப் பத்திரிகை ஆசிரியர்களிடமிருந் தும் பதிப்பகக்காரரிடமிருந்தும் பாதுகாத்து அவருடைய வீடு, பண்ணை, பணம் யாவற்றையும் திறம்பட நிர்வகித்து இத்தனைக் கும் மத்தியிலும் அவருக்குப் 13 பிள்ளைகளையும் பெற்றெடுத்து, வளர்த்ததுடன் அவருக்கு காதலி யாகவும், அடிமையாகவும் வாழ்ந்த ஸோபியாவை விட்டு டால்ஸ் டாய் ஓடியது வியப்பை மட்டு மல்லாது அவரையிட்டு ஒரு தாழ்ந்த அபிப்பிராயத்தையே ஏற் படுத்துகின்றது.

டால்ஸ் டாய் தனது 63-வது வயதில் எழுதிய ஒரு கதையே அவர் எழுதியவற்றுள் காம உணர் ச்சி மிக்கது எனச் சொல்லப்படு கின்றது. இந் நாட்களில் ஸோபியா தனது நாட்குறிப்பில் பின்வரு மாறு எழுதுகின்றாள். "இவர் சாதாரணமாகவும் அன்புடனும் நிறைய மனித பலவீனங்களுடன் இருக்கையில் இவரை நான் வெகு வாக நேசிக்கின்றேன். ஆனால் யாருமே மிருகமாக இருக்கக் கூடாது. அத்துடன் தன்னிடம் இல்லாத மேன்மையான குணங் கள் பிறரிடம் இருக்க வேண்டும் எனப் போதிக்கக் கூடாது. இவரு டைய படைப்புக்களைப் படிக்கும் வாசகர்களுக்கு இவருடைய சொந்த வாழ்க்கை எப்படியான தென ஒரு சிறிதளவு தெரிந்தால் போதும், இவரை உயரத் தூக்கி வைத்து ஆராதிக்கும் அவர்கள் தூக்கி எறிந்துவிடுவார்கள்".

இந்தளவுக்கு டால்ஸ் டாயிடம் அன்பும் பக்தியும் வைத்திருந்த ஸோபியா பின்னாட்களில் ஒரு மனநோயாளியாகிப் போனதன் காரணம் என்ன?

டாலஸ் டாய், மன்னரின் கொடுங்கோல் ஆட்சியையும் அத ற்குத் துணை நின்று மக்களை வருத்திய கிறீஸ்தவ திருச்சபை யையும் தனது எழுத்தினால் பய மின்றிச் சாடியவர். தனி மனித சுதந்திரத்திற்கு அதி உயர்ந்த இடத் தை வழங்கிய இவர் சிறந்த சிந் தனையாளராகவும் இருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com



மகாத்மா காந்தி அகிம்சையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்திய தற்கு டால்ஸ் டாயின் எழுத்தே காரணமாக இருந்தது. மக்கள் ஆதரவு டால்ஸ் டாயின் பக்கம் அதிகமாக இருந்ததனால் மற்றைய புரட்சிகர எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் சிறையில் அடைத்தது போன்று டால்ஸ்டாயையும் சிறையில் அடைப்பதற்கு அரசு பயந்தது. ஆனால் ரஷ்ய கிறிஸ்தவ திருச்சபை இவரை தனது சபையிலிருந்து வெளியேற்றியது. இப்படிப்பட்ட பெரும் எழுத்தாளர் டால்ஸ் டாயின் கொள்கைகளைப் பலர் பின்பற்றினார்கள். டால்ஸ் டாயிசம் என அழைக்கப்பட்ட இச் சித்தாந்தத்தை சிரத்தையுடன் வளர்த்தெடுக்கப் பல சீடர்களும் இருந்தார்கள். இவர்களுள் ஒருவரான சேட்கோவ் நாளடைவில் டால்ஸ் டாயிக்கு மிகவும் நெருங்கியவராக இருந்தார். டால்ஸ் டாயின் எழுத்துக்கள் பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் பிரபலமாவதற்கு இவரே காரணம் எனச் சொல்லப்படுகின்றது.

தான் ஒரு புதிய மதத்தை உருவாக்க வேண்டும், மக்களுக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும் என விரும்பிய டால்ஸ் டாய் இந்தச் சீடரை மிகவும் அதிகமாக நேசித்தார். அத்துடன் தனது படைப்புக்களையும் நாட்குறிப்புக்களையும் முதலில் வாசிக்கும் உரிமையையும் இந்த சீடருக்கு டால்ஸ் டாய் வழங்கிய போது அதை ஸோபியாவினால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. தம்பதிகள் மத்தியில் பிணக்கும் பிரச்சினைகளும் உருவாக இதுவே முக்கியகாரணம் என்று கருதப்படுகின்றது.

★★★

தான் விரும்பி உபயோகிக்கும் தலையணையைக் கண்டதுமே மரணப் படுக்கையில் இருந்த டால்ஸ் டாய் மிகவும் பரபரப்புடன் ஸோபியாவைப் பற்றி விசாரிக்கின்றார். "அவள் என்ன செய்கின்றாள்?... எப்படி இருக்கின்றாள்?.... இங்கு வருவாளா?... சொல்லுங்கள்!.... சொல்லுங்கள்!... இதைவிட மிக முக்கியமான விஷயம் எனக்கு ஏது!..." எனத் தவித்துத் துடிக்கின்றார்.

ஆனால் அவரைச் சுற்றியிருந்த அவருடைய பிள்ளைகளும் சீடர்களும் உண்மையை அவருக்குக் கூறவே இல்லை. ஸோபியாவை அவர்கள் உள்ளே அனுமதிக்கவும் இல்லை. அவளுடைய வரவு இவருடைய உடல்நிலையை மோசமாக்கிவிடும் என்றே காரணம் சொல்லப்பட்டது.

ஈற்றில் அவர் மரணமடைவது நிச்சயம் எனத் தெரிந்த போதுதான் ஸோபியாவுக்கு அவர் அருகில் செல்ல அனுமதி கிடைத்தது. அவருடைய படுக்கை அருகில் முழந்தாளில் வீழ்ந்து ஸோபியா கண்ணீரினூடே "என்னை மன்னியுங்கள்!... என்னை மன்னியுங்கள்!.." என மெலிதாக அரற்றுகின்றாள். அப்போதுகூட அவளை அங்கு தொடர்ந்து இருக்க அவர்கள் அனுமதிக்கவில்லை. டால்ஸ் டாய் இறுதி மூச்சை இழுத்துக் கொண்டிருந்தவேளை யில்தான் தன் கணவனிடத்துக்குச் செல்ல ஸோபியாவுக்கு அனுமதி கிடைக்கின்றது. "உங்களைத் தவிர வேறு எவரையுமே நான் காதலித் தது கிடையாது!..." என அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போது டால்ஸ் டாயின் உயிர் பிரிகின்றது. ஸோபியா அவருடைய நெஞ்சில் சாய்ந்து அழுகின்றாள். அப்போது அவள் டால்ஸ் டாயை மனப்பூர்வ மாக மன்னித்துத்தான் இருக்க வேண்டும். ஆனால் அவள் தன்னைத் தான் மன்னித்தாளா என்பது எவருக்குமே தெரியாது.

★★★

பொதுவாழ்விலும் பல்வேறு துறைகளிலும் மிகவும் உயர்ந்த நிலைக்கு தம்மை உழைப்பால் உயர்த்திக் கொண்டவர்களின் வாழ்க்கை வரலாறுகளை நாம் விரும்பிப் படிக்கின்றோம். நம்மால் செய்யமுடியாததை இவர்களால் எப்படிச் செய்ய முடிந்தது என அறிந்துகொள்ளும் ஆர்வமே இதற் குக் காரணம் எனலாம்.

அதே சமயம் இப்பேர்ப்பட்ட சாதனையாளர்கள் சிலர் தமது சொந்த, பிரத்தியேக வாழ்வில் பலவீனங்களுக்கு அடிமையாக இருந்தனர் என்பதை பின்பு அறியும்போது "அட! இவரா இப்படியெல்லாம் செய்தார்!" எனத் திகைத்துப் போகின்ற அதே சமயம் எம்மை அறியாமலே எம் முள் ஒரு குரூரமான மனத்திருப்தி யும் தோன்றுகின்றது எனச் சொல்லப்படுகின்றது. எம்மால் இயலாததை இன்னொருவர் சாதிக்கும் போது எம்முள் பொறாமை உணர்வு ஏற்படுவது இயற்கையானதே! அப்பொறாமை தான் இந்த வக்கிர திருப்திக்குக் காரணமாகின்றது.

மனிதர்கள் யாவருக்கும் இயற்கையாகவே இருக்கின்ற இந்த வக்கிர புத்திக்குத் தீனி போட்டு பணம் சம்பாதிப்பது இக் காலத்தில் ஒரு லாபகரமான வியாபாரம். டயானாவின் வாழ்க்கை இதற்கு ஓர் அண்மைக்கால உதாரணம்.

ஆனால் சாதனையாளர்களின் பலவீனங்களிலும் நாம் ஓர் பாடத்தைக் கற்றுக் கொள்ள முடியும். இலட்சிய தாகமும் தீவிர உழைப்பும் இருக்குமேயானால் நம்மைப் போன்ற பலவீனங்கள் கொண்ட சாமானியர்கள் கூட சாதனையாளர் வரிசையில் நிச்சயமாக இடம்பெற முடியும்.

அ. பாலமனோகரன்



படிப்பகம்

www.padippakam.com



# நாட்டியம் பற்றி சிலரிடமிருந்து ...

பரதநாட்டிய அரங்கேற்றங்கள் அவசியமானவையா? இல்லையா? என்பது பற்றிய வாதப் பிரதிவாதங்கள் ஐரோப்பிய அளவில் தொடர்ச்சியாக நடைபெற்று ஏறத்தாழ ஓய்ந்து போய்க்கொண்டிருக்கின்றன. பரதநாட்டிய அரங்கேற்றங்களுக்கு எந்தளவிற்கு எதிர்வினை இருந்ததோ அதைவிட பலமடங்கு அதிகமாகப் பரதநாட்டிய அரங்கேற்றங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. தாயகத்தில் பரத நாட்டிய அரங்கேற்றமென்பது ஒரு காலத்தில் பொருளாதார பலம் படைத்தோருக்குரியதாகவே இருந்துவந்தது. இன்று நமக்குக் கிடைத்துள்ள ஐரோப்பியச் சூழல் பொருளாதார ரீதியாக இருந்த தடைகளை ஓரளவு நீக்கியுள்ளதென லாம். பல அரங்கேற்ற நிகழ்வுகளுக்குச் சென்று பலதரப்பட்டவர்களிடமிருந்தும் சேகரித்த தகவல்களை இங்கு தருகிறோம்.

## பெற்றோர் தரப்பிலிருந்து:_

தமிழர் சமூக வாழ்விற்கு ஒழுக்கநெறிக் கல்வி மிக அவசியம் இன்றைய ஐரோப்பியச் சூழலில் நமது பிள்ளைகளுக்குத் தேவையான ஒழுக்கவியல் கலாச்சாரக் கல்வியைப் பெறுவதற்கு உரிய வாய்ப்புக்கள் இல்லை. சமூகம் உரிய மதிப்பைத் தருவதற்கு தவறியமையே இன்று இளைஞரிடையே வளர்ந்து வரும் கோபத்திற்கும் சமூக வெறுப்பிற்கும் காரணமாகிறது. இதோ பாருங்கள் இத்தனைபேர் வருகை தந்து ஒரு பிள்ளையின் முயற்சியைப் பாராட்டுகிறார்கள். இதுவே பிள்ளைக்கு சமூகம் தரும் நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்குப் பாதகம் செய்யாமல் வாழவேண்டிய தேவையையும் அரங்கேற்ற நாள் ஏற்படுத்திவிடுகிறது. ஒரு பிள்ளை சமூகத்தைச் சீர்குலைக்காது வாழ இது தேவையென நாம் நினைக்கிறோம்.



## கலைஞர்களிடமிருந்து:_

நாம் நமது பணியை மகிழ்வுடன் செய்கிறோம். கலைஞர்களுக்கு பெருந்தொகை பணம் செலவாகிறதெனச் சிலர் கூறுகிறார்கள். இது தவறு. ஐரோப்பாவில் ஊதியம் என்பது உழைக்கும் நேரத்திற்குத்தான். ஐரோப்பியத் தொழிற்சாலையில் வேலை செய்பவர் தமிழர் என்ற காரணத்தால் சம்பளத்தைக் குறைவாகப் பெறுவதில்லை. சம்பளம் சட்டத்தினால் வரையறையாகிறது. தமிழ் மக்களிடையே பணிபுரியும் கலைஞர்களுக்கு மட்டும் குறைந்த ஊதியம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் தவறானது.

## விஷயமறிந்த பார்வையாளரிடமிருந்து:_

பாடல்களில் புதைந்துள்ள கருத்துக்களை மாணவர்கள் எவ்வளவு தூரம் உள்வாங்கியுள்ளனர் என்பது கேள்விக்குறியாக உள்ளது. தாளத்திற்கேற்ப அடவு, முத்திரைகள், பாவம், நவரசம் போன்றவைகளை வெளிப்படுத்த வயதும் அனுபவமும் மிக அவசியம். எனவே அரங்கேற்றங்களில் அவசரம் கூடாது. அரங்கேற்றம் என்பது பரதத்தின் அரிச்சுவடி. அதையே பலர் பரதத்தின் கொடுமுடியென நினைக்கிறார்கள். முதலில் இதைப் புரிவது அவசியம். முயற்சியும் பயிற்சியுமே மேன்மை தரும்.

## அழைப்பையேற்று வந்திருப்பவரிடமிருந்து:_

விசிலடிப்போர், போத்தல் எறிவோர், குழுக்களாக மோதுவோரின் தொல்லைகள் இல்லாமல் இருப்பதே பெரிய நின்மதி. எனினும் எமக்கும் மேடையில் நடைபெறும் நிகழ்விற்குமிடையே ஏதோ ஓர் இடைவெளி தெரிவதைப் போன்ற உணர்வு. பாடல்களில் தமிழிசை இருந்தால் நன்றாக இருக்கும்.

## ஐரோப்பிய மக்களிடமிருந்து:_

நமது ஐரோப்பியக் குழந்தைகளிடையே சில பாரம்பரிய விடயங்கள் இன்று முற்றாகவே விடுபட்டுப்போயுள்ளன. அது எமக்குக் கவலைதெரிகிறது. ஆனால் நீங்களோ எங்கு சென்றாலும் உங்களது கலை, பண்பாடுபற்றிச் சிந்திக்கிறீர்கள். தமிழர்பற்றி நாம் உயர்வாக மதிக்க அவர்களின் கலைகள் முக்கிய காரமணாக இருந்து வருகின்றன.

★



படிப்பகம்

www.padippakam.com



# மூன்று முடிச்சு.....!

பரிதாபமாக நின்றுகொண்டிருந்தார் பரந்தாமன். அழகான மனைவி, அன்பான பிள்ளைகள், பேரன் பேத்திகள் எல்லோரையும் விட்டுவிட்டு இங்கே வந்தது எவ்வளவு மடத்தனம்! தன்னையே நொந்துகொண்டிருந்தவரை மேலும் நோகடித்தான் தோட்டக்காரன் குருசாமி. இன்னாபா நீ.... மரமாட்டம் நிக்கறே. போய் ஏதாவது வேலை செய்... டாண் டாண்ணு மூன்று வேளையும் கொட்டிக்கிட மட்டும் தெரியுது....

யோவ்... வாய்யா இப்பிடி..... வந்து இந்த காய்கறிகளை நறுக்கு. சும்மாதானே சுத்திச் சுத்தி வர்றே. பொழுது போக வேணாமா...?– இது சமையல்கார சொர்ணம்.

பிரதர்.... நாய்க்கு பிஸ்கெட் வாங்கிட்டு வரச் சொன்னேனே மறந்து போச்சா.... போ பிரதர். ஜல்தியா வாங்கிட்டு வா – இது நாய் வேலைக்காரன் கோபால்.

பரந்தாமன் அப்படியே விதிர்த்துப்போய் நின்றார். வாசலில் நின்றிருக்கும் வாட்சுமேனிலிருந்து சமையல்காரி வரை கொஞ்சம் கூட மட்டுமருவாதி இல்லாமல் நடத்துகிறார்களே...!

அவரது பெரிய குடும்பம் அவர் கண் முன் வந்து 70mm சைஸில் ஏளனமாகச் சிரித்தது.

மெல்ல வாசலுக்கு வந்தவரை, டிரைவர் தணிகாசலம் வழி மறித்தான். யோவ், நில்லுய்யா பரந்தாமா .... எங்கே ஓடுறே?

பரந்தாமனுக்கு கொஞ்சூண்டு கோபம் வந்தது.

இந்தாப்பா, நான் ஒரு பெரிய டாக்டர். வெளிநாட்டுல படிச்சவன். என் பையன்களெல்லாம் நீதிபதிகளா இருக்காங்க. உன்னைவிட 10 வருஷம் மூத்தவன். எல்லாத்தையும்விட... சொல்லிக்கொண்டே போனவரை இடைமறித்தான் தணிகாசலம்.

அதனால என்னய்யா இப்போ? குடியா முழுகிப் போச்சு....

இதுக்கு மேலே என்னப்பா முழுகணும்? டிரைவரான நீ கூட மதிக்கமாட்டேன்றியே....?

அவ்வளவுதான், தணிகாசலம் வானத்துக்கும் பூமிக்கும் குதிக்க ஆரம்பித்தான்.

இதோ பார்.... இன்னா நினைச்சுக்கினு கீறே மனசுலே? சாதாரண டிரைவர்தானேன்னு இளக்காரமா? நீ இந்த வூட்டுக்கு வந்து எத்தினி நாளாச்சு?

நடுங்கிக்கொண்டே சொன்னார் பரந்தாமன் – நாலுமாசமாச்சு.

நாலு மாசத்துக்குள்ளே இந்த ஆட்டம் ஆடுறியே .... தா பார், நான் இங்கே டிரைவரா வந்து ஒரு வருஷம் கம்ப்ளீஷனாகுது....! அதோ அந்த சமையல்காரி வந்து ரெண்டு வருஷமாச்சு. தோட்டக்காரன் மூணு வருஷமா இருக்கிறான். எங்க சர்வீஸ்ல எங்க முதலாளியம்மா நடிகை நாகஸ்ரீக்கு, இதுவரை வந்திருக்கிற ஏழு புருஷன்மார்களை எங்களுக்குத் தெரியும். நாங்க பார்க்கிற நீ எட்டாவது புருஷனாக்கும். இன்னைக்கு வந்துட்டு நாளைக்குப் போற கன்ஃபார்ம் ஆகாத கஸ்மாலத்துக்கு இவ்வளவு லொள்ளா...?

டிரைவர் தணிகாசலத்தின் ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டியாக நெஞ்சில் குத்த –

தன்னோட பொரிய குடும்பத்தை விட்டுவிட்டு ஒரு நடிகையின் கணவனானதற்கு உண்டான பலனை அனுபவித்தபடி மாடிப்படியோரம் உட்கார்ந்து அழ ஆரம்பித்தார் – டாக்டர் பரந்தாமன் எம்.பி.பி.எஸ், எம்.டி, நடிகை நாகஸ்ரீயின் புதிய கணவர்.

# புருஷன் இல்லை!

ஒரு வீட்டுக்குள் நள்ளிரவில் திருடர்கள் புகுந்தார்கள்.

கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த தம்பதிகளை எழுப்பி, துப்பாக்கி முனையில் மிரட்டி, தூணில் கட்டிப்போட்டுவிட்டு எல்லாவற்றையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு புறப்பட்டபோது, அந்த ஆள் கெஞ்சினான்.

இந்தாங்கப்பா.... உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு... என்னை அவுத்து விட்டுடுங்கப்பா...!

அட... அவுத்து விட்டா உடனே போய் உதவிக்கு ஜனங்களையும் போலீசையும் கூப்பிட்டுட்டு வந்துடலாம்னு பார்க்கிறியா....?

சத்தியமா இல்லப்பா.... என்னை அவுத்து விட்டா நான் எங்கேயாவது ஓடிப் போய்டறேன்பா. உங்களுக்கு இடைஞ்சல் பண்ணமாட்டேன், பிளீஸ்...!

அடப்பாவி... பொண்டாட்டியை அவுத்துவிடுங்கன்னு சொல்லமாட்டேங்கறே? அவளோட உயிரைவிட உன்னோட உயிர் உனக்குப் பெரிசாப் போய்டுச்சோ... நீயெல்லாம் ஒரு புருஷனா...?

அவன் அலறினான் – இல்லப்பா, நான் அவளோட புருஷன் இல்லே.... அதனாலேதான் சொல்லுறேன், என்னை அவுத்து விட்டுடுங்கப்பா.... ப்ளீஸ்....ப்ளீஸ்.....!



படிப்பகம்

www.padippakam.com



# பாரிஸில்

உங்களுக்குத் தேவையான புதிய
பழைய பாடல்கள் திரைப்படங்கள்
கொம்பக் டிஸ்குகளிலும் (C D)
பெற்றுக்கொள்ளவும் மற்றும்
பழைய புதிய திரைப்படங்கள்,
திரைப்படப்பாடல்கள் ஆகியவற்றை
வீடியோ கசற்றுக்களில்
பெற்றுக்கொள்ளவும் நீங்கள்
பாரிஸ் லாச்சப்பலில் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்.

# LUNE

## INTERNATIONAL

12 Rue Perdonnet, 75010
Paris. Mo: La Chapelle



படிப்பகம்

# இயற்கை மரத்தினால் செய்யப்பட்ட கார்!

## இயந்திரங்கள் மட்டும் இரும்பில்!

லூயிஸ் வார்ட்டல் என்பவர் 44 வயதுடைய பிரான்சியர். இவர் பேஜோ கார் 203—ன் 1950 ஆண்டு வடிவத்தை அப்படியே மரத்தினால் செய்து முடித்திருக்கிறார். இதற்கு இவர் ஒருவித மரத்தைப் பயன் படுத்தவில்லை பலவிதமான மரங் களைப் பயன்படுத்தியிருக்கிறார். இதை உருவாக்க 60.000 பிராங்குகள் செலவாகியுள்ளது. பிரான்ஸ், ஜேர் மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இக்காரை கண்காட்சிக்கு வைத்து தான்விட்ட பணத்தை உழைப்பது இவரது திட்டமாகும்.










# நாடும் மக்களும்

# ரஷ்யா



ரஷ்யா உலகிலேயே மிகப்பெரிய நாடாக விளங்குகிறது. 17 மில்லியன் சதுர கிலோ மீற்றர்களைக் கொண்ட ரஷ்யா தனது எல்லைகளாக 14 நாடுகளைக் கொண்டுள்ளது. ரஷ்யாவில் 8 நேர வித்தியாசங்கள் உள்ளன. வருடத்தில் அதிகூடுதலான நாட்கள் குளிராகவும் சில நாட்களே வெப்பமாகவும் உள்ளது.



பல நூற்றாண்டுகளாக ஜார் மன்னர்களின் ஆட்சியிலிருந்த ரஷ்யா 1917—ல் விடுபட்டு கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் வந்தது. ரஷ்யாவின் மேற்குப் பகுதி ஐரோப்பாவிலும் ஏனைய பகுதிகள் ஆசியாவிலும் உள்ளன. ரஷ்யர்களில் அனேகமானோர் மேற்கு ரஷ்யாவிலேயே வாழ்கின்றனர். ரஷ்யாவின் தலைநகரான மொஸ்கோ உலகிலேயே அதிகூடிய சனத்தொகையைக் கொண்ட நகரமாக உள்ளது.

1991—ல் கம்யூனிசம் வீழ்ச்சியுற்ற போது ரஷ்யாவின் பொருளாதாரம் கம்யூனிசத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறுவதற்கு மிகவும் சிரமமாகவே இருந்தது. 1991—ற்கு முன்னர் சோவியத் யூனியன் என்னும் பெயரின் கீழேயே ரஷ்யா இருந்தது.


கி.மு 1200—ம் ஆண்டளவில் பால்கன் மக்கள் அங்கு வாழ்ந்ததாகவும் கி.பி. 800—ம் ஆண்டளவில் அங்கு அடிமைகள் குடியமர்த்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மங்கோலியா 1237—ம் ஆண்டளவில் ரஷ்யாமீது படையெடுத்தது. இதனால் சுமார் 200 ஆண்டுகள் ரஷ்யா மங்கோலிய சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்து வந்தது. பின்னர் ஜார் மன்னர்களே ரஷ்யாவை மங்கோலியாவிலிருந்து மீட்டனர்.

**பரப்பளவு**— 17,075,000 ச.கி
**சனத்தொகை**— 148,366,000
**தலைநகர்**— மொஸ்கோ
**அரசமொழி**— ரஷ்யன்
**பிரதான மொழிகள்**— கிறிஸ்தவம், இஸ்லாம், யூதம்
**நாணயம்**— ரூபிள்
**பிரதான ஏற்றுமதி**— இயற்கை வாயு, பெற்றோலியம், இரசாயனப்பொருட்கள், மரம், இயந்திரங்கள், உணவுப் பொருட்கள்.

www.padippakam.com

# 2003–ல் உலகின் மிகப் பெரிய

# விண்வெளி ஆராய்ச்சி நிலையம்



**பாதுகாப்புக் கலம் X —38**
**2002–ல் தயார்**



**விபரம்**

நிறை – 426 தொன்

நீளம் – 110 மீற்றர்

அகலம் – 89 மீற்றர்

பங்காளிகள் – அமெரிக்கா, ரஷ்யா, ஜரோப்பா, ஜப்பான், கனடா.

பயணம் செய்யக்கூடிய உயரம் – 335 – 460 கி.மீ


பூமியைச்சுற்ற எடுக்கும் காலம் – 90 நிமிடங்கள்

ஆயுட்காலம் – 10 வருடம்

படிப்பகம்

www.padippakam.com


உலகத்தின் மிகப் பெரிய விண்வெளி நிலையம் அமைக்கும் பணி இவ்வாண்டு செப்டெம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கிறது. விண்ணில் வலம் வந்து கொண்டிருந்த ரஷ்ய விண்கலம் மியர்(Mir) பழுதடைந்து அதைத் திருத்துவதற்கு ஏற்பட்ட பெரும் சிரமங்களின் பின்னர் இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது. உலகில் 15 நாடுகள் இணைந்து பல கோடி டொலர்கள் செலவில் இதற்கான வேலைத் திட்டத்தை தயாரித்துள்ளன. ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், கனடா போன்றன முக்கிய முதலீட்டாளர்களாக உள்ளன. தரையில் இருந்து 335 முதல் 460 கி.மீ உயரம் வரை பறக்கும் இந்த விண்வெளி நிலையத்தின் நீளம் 110 மீற்றர், அகலம் 89 மீற்றர், எடை 426 தொன். இந் நிலையத்தில் 6 அல்லது 7 நபர்களே உள்ளே இருக்கமுடியும். பத்தாண்டுகள் தொடர்ந்து செயற்படவல்ல இந்த விண்வெளி நிலையத்தை ஐந்து பிரதான கட்டங்களாகத் தயாரித்து வானவெளிக்கு எடுத்துச் சென்று பொருத்தவுள்ளனர். பூமத்திய கோட்டிலிருந்து 51.6 பாகை கோணத்தில் பூமியை வலம் வரும் இந் நிலையம் மணிக்கு 29000 கி.மீ வேகத்தில் நகரும்.



15 நாடுகள் இணைந்து பல கோடி டொலர்கள் செலவில் இதற்கான வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளன

www.padippakam.com







மேற்படி விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டால் பூமியிலிருந்து வேறு கிரகங்களுக்கு மேற்கொள்ளப்படும் பயணங்கள் விண்வெளி ஆராய்ச்சி உட்பட பல்வேறு விடயங்களில் பெரும் பாய்ச்சலொன்று மனிதர்களால் நிகழ்த்தப்படும் என எதிர்பார்க்கலாம். பொருளாதாரம் பாதகமாக இருந்தாலும் செப்டெம்பர் 98 ரஷ்யாவின் சார்யா வகைக் கலம் முதலாவதாக வானில் மிதக்க வைக்கப்படும். பின்னர் இவ்வாண்டு டிசம்பரில் அமெரிக்காவின் யூனிற்றி என்ற கலம் இத்துடன் இணையும். மூன்றாவதாக 73 மீற்றர் நீளமான சேவைக்கலம் 1999 ஏப்ரல் மாதம் வாண்வெளிக்குப் பறக்கும். 2000–ல் நான்காவது பகுதியும் 2003–ல் ஐந்தாவது பகுதியும் இணையும் போது இதுவே உலகின் மிகப் பெரிய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் எனப் பெயர் பெறும்.


இவ்விதம் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதுடன் நாசா விண்வெளிக் கழகம் இருந்துவிடவில்லை. மியர் விண்கலத்திற்கு ஏற்பட்டது போல இதற்கும் பாதிப்புகள் உண்டாகலாம் என உணர்ந்து விண்வெளி ஆய்வாளர்களின் உயிர்ப்பாதுகாப்புக்காக X—38 என்னும் புதுவகையான பாதுகாப்புக் கலத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இப்பொழுது உள்ள விண்வெளிப் பயண முறையில் ஓர் றொக்கற் புறப்பட்டு அதற்கு நடுவழியில் ஏதாவது தீங்கு நடந்தால் மீட்புப் பணிக்கு சரியான ஏற்பாடுகள் இல்லை. புதிதாக வரவிருக்கும் X—38 இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கும்.

உதாரணமாக புதிய விண்வெளி நிலையம் 2003–ல் அமைக்கப்பட்டுவிட்டது. 2004–ல் ஓர் பாரிய விபத்தை எதிர்நோக்குகிறது. ஓர் பழைய விண்வெளிக் கலம் இதனுடன் மோதுவதற்கு அருகில் நெருங்கிவிட்டது. விண்கலத்தின் பாதையை மாற்றுவதற்குள் மோதல் நிகழ்ந்துவிடும். அப்படியானால் என்ன செய்யலாம்? மூன்றே மூன்று நிமிடங்களே போதும், X—38 பாதுகாப்புக் கலம் உள்ளே இருப்போரை மீட்டுக் கொண்டு விண்கலத்திலிருந்து பாதுகாப்பான இடைவெளிக்கு விரைந்து பறந்துவிடும். இது 8.5 மீற்றர் நீளமும், 4 மீற்றர் அகலமும் உடையது. 9 மணி நேரம் உயிர் வாழக்கூடிய ஒட்சிச

www.padippakam.com





னும், உணவும் உள்ளே உண்டு. கணணி மூலம் இயங்குவதால் வானத்திலிருந்து இறங்கும் இடத்தை பதிவு செய்தாலே போதும் வான ஓடு பாதை வழியைத் தெரிவு செய்து தரையிறங்கிவிடும். இதற்கு சிறகுகள் இல்லாமையால் திருப்பித் திருப்பி ஓடுவது மிக மிக இலகு. தரையைத் தொட்டதும் பின்புறமாக ஓர் பரசூட் விரிந்து இதன் வேகத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்திவிடும். இதை உருவாக்க *500* மில்லியன் டொலர்களும் *100* வேலை ஆட்களும் தேவைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் X—*38*—ஐ விண்வெளிக்கு அனுப்பும் போது றொக்கற்றுக்களில் பொருத்தியே அனுப்பமுடியும். ஆரியான் – *5* முதல் உலகின் பிரதான நாலு வகையான றொக்கட்டுக்களிலும் இதைப் பொருத்தி எடுத்துச் செல்லலாம். இதற்குள் இருப்போர் சாதாரண உடைகளுடனேயே இருக்கமுடியும். இப்போது விண்வெளியில் ரஷ்யாவின் சூயூஸ் (SOJUS) இரக பாதுகாப்பு கலன்களையே பயன்படுத்துகிறார்கள். *2002*–ல் இருந்து X—*38* பாவனைக்கு வந்துவிடும். கொலம்ப என்னும் புதிய ஆராய்ச்சி நி யமும் பாதுகாப்புக் கலமான X *38*–ம் விண்வெளி ஆராய்ச் துறையில் அடுத்த நூற்றாண்டி மிகப் பெரும் பாய்ச்சல அமையும்.


கிருஷ்ண

www.padippakam.com

தொழில் நுட்பம்

# உழைப்பால் உயர்ந்தவர்

## டெக்னோ மல்ரிமீடியா அதிபர் அலெக்ஸ் பிறதெறெக்சன்!



**சீ.டி உற்பத்தியில் அசுர சாதனை! 1998-ம் ஆண்டின் மொத்த வருமானம் 200 மில். குரோணர்கள். மேலதிக வருமானம் 20 மில். குரோணர்கள். 1998-ல் முழு ஐரோப்பாவிலுமே 50 வீதமான சிடிக்களின் உற்பத்தி இவருடையதே.**

உழைப்பால் உயர்ந்த அலெக்ஸ் பிறதறெக்சனையும் அவருடைய சி.டி உற்பத்தித் தொழிற்சாலையையும் காண வேண்டுமானால் டென்மார்க்கின் தலைநகரான கொப்பன்கேகனின் வடபுலத்திற்குச் செல்லவேண்டும். அங்கு 1.7 வினாடிகளில் ஒரு சி.டி உற்பத்தி நடைபெற்றுக்கொண்டிருக்கும் காட்சியை நேரடியாகக் கண்டுகொள்ளலாம். டென்மார்க்கில் பல ஆயிரம் விற்பனையாகிய அக்குவா சி.டி–யும் இவரது தொழிற்சாலையிலேயே தயாரிக்கப்பட்டது என்பதைப் புரிந்து கொண்டால் இந்த நிறுவனத்தின் அசுர உற்பத்தியை ஓரளவு விளங்கிக் கொள்ளலாம். மொஸ்கோ, லிஸ்பன், ஒஸ்லோ, ஹம்பேர்க் ஆகிய பெரு நகரங்களிலெல்லாம் விற்பனை மையங்களைக் கொண்டது இவருயை ரெக்னோ மல்ரி மீடியா நிறுவனம்.

அலெக்ஸ் பிறதறெக்சனின் வாழ்வும் சிந்தனையும் ஒவ்வொருவருக்கும் நல்ல படிப்பினை தருவதாக உள்ளது. இவர் சிறுவனாக இருந்த காலத்தில் தனது தந்தையாரின் தொழில்நுட்ப நடவடிக்கைகளை கூர்ந்து அவதானிப்பதை முக்கிய பொழுது போக்காகக் கொண்டிருந்தார். இவரின் தந்தையார் 1967–ல் இருந்து ஒலி பெருக்கிகளை திருமண வீடுகளுக்கும் டிஸ்கோ நிலையங்களுக்கும் வாடகைக்கு விடுவதைத் தொழிலாகக் கொண்டிருந்தார். 1975 காலப் பகுதியில் ஓடியோக்கள் பாவனைக்காக சகல வீடுகளுக்குள்ளும் வந்து சேர்ந்துவிட்டதால் இவரது ஒலிபெருக்கியை வாடகைக்கு அழைப்பவர்கள் இல்லாது போயினர். இதனால் இவரது தந்தையின் தொழிலும் வருமானமும் ஸ்தம்பிதமடைந்தது. தந்தையாரைப் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியானது வேலையற்றவராகத் தள்ளியது. இது பிறதறெக்சனிடம் சில புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தது. தொழில் நுட்பம் மாற அதற்கேற்ப தானும் மாறிக்கொள்ளாமை தந்தையார் விட்ட தவறென அறிந்து கொண்டார். எனவே அவர் புதிய முயற்சியில் இறங்கினார்.



1 – பதிவது முதல் 8 விதமான உள்ளடக்கங்களைக் கொண்ட நெகட்டீவ் மாஸ்ரர் பிரதியை [இது வே Mother எனவும் அழைக்கப்படுகிறது] உற்பத்தி செய்யும் இயந் திரம். தூசு, பக்டீரியா எதுவுமே நெருங்கமுடியாது கண்ணாடித் திரை இதைக் கவனிக்கும்.



படிப்பகம்

# 17 கிராம் பிளாஸ்டிக் சி.டிக்களின் உற்பத்தி முறை

17 கிராம் பிளாஸ்டிக் சி.டிக்களின் உற்பத்தி முறை


17 கிராம் பிளாஸ்டிக் சி.டிக்களின் உற்பத்தி முறை




2 – உற்பத்தி செய்யப்பட்ட மாஸ்டர் பிரதி இங்கே இரும்புத் தகடு போல தோய்க்கப்படும்.




3 – இவ் இயந்திரத்தில் Mother CD பொருத்தப்பட்டு நடுவில் துளை இடப்படும். இத னால் அழுத்தும் இயந் திரத்தில் இலகுவாக பொருந்தக்கூடிய தாக இருக்கும்.



4 – இந்த Mother CD 38 தொன் [illegible] இயந்திரத்தால் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இதிலிருந்து அதி கூடுதலாக 50 ஆயிரம் சி.டி க்களை உற்பத்தி செய்யலாம்.



5 – உற்பத்தி செய்யப்பட்ட சி.டி க்களை படிமுறையாக அடுக்கி பதிவு செய்யும் இயந் திரத்திற்கு அனுப்பி வைக்கும்.



6 – சி.டி யின் மேற்பகுதி யில் சி.டி யின் விபரம் அச் சடிக்கப்பட்டு அடுத்த கட்டத் திற்கு அனுப்பப்படும்.




7 பிளாஸ்ரிக் பெட்டிகளில் [illegible] அடைக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராகும்.

www.padippakam.com



ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 1981–ம் ஆண்டு தனது வீட்டின் கீழே இருந்த நில அறையில் ஓடியோ பிரதி பண்ணும் தொழிற்சாலையை ஆரம்பித்தார். இது வெற்றிகரமாக ஓடியது. ஆனால் தொழில்நுட்பம் அப்பொழும் மாற்றமடையத்தான் செய்தது. புதிதாக சி.டிக்களே சந்தையில் பெரும் பரபரப்பாகிவிடும் என்பதை உணர்ந்துகொண்டு சி.டி தயாரிப்பு நிறுவனத்தை ஆரம்பித்தார். பத்தாயிரம் சதுர மீற்றர் பரப்பளவில் இவரது புதிய உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டது. இரண்டு பெரிய ஒலி அச்சு ஸ்ரூடியோக்கள், சி.டி உற்பத்தி தொழிற்சாலை, சி.டி க்களில் வீடியோ பிரதிபண்ணும் நிலையமென்று மூன்று பெரும் தொழிற் பகுதிகளை உருவாக்கினார். 1981–ம் ஆண்டு தொழிலை ஆரம்பித்த இவர் பத்து வருடங்களில் மிகப் பெரும் வருமானம் பெற்றவர் என்ற பாராட்டையும், பரிசையும் பெற்றுக் கொண்டார். 1998–ம் ஆண்டு மாத்திரம் இவரது நிறுவனம் 200 மில்லியன் குரோணர்களை (30 மில்லியன் அமெரிக்க டொலர்) மேலதிக இலாபமாக ஈட்டுமென கணிப்பிடப்பட்டுள்ளது. DVD (Digital Versatile Disc) மூலமான சி.டி உற்பத்தியில் ஐரோப்பிய ஒன்றியத்திலேயே இவரது உற்பத்தி 50 வீதமாகும். 98–ம் ஆண்டு எதிர்பார்த்த கணக்கைவிட 20 மில்லியன் குரோணர்கள் மேலதிகமாகக் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

55 வயதான அலெக்ஸ் பிறதறெக்சனிடம் உங்கள் உற்பத்தி வெளியீட்டில் உச்சப்புள்ளியைப் பிடித்துவிட்டீர்களா என்று கேட்டால் இல்லவே இல்லை என்கிறார். ஏனெனில் சி.டி யில் இப்பொழுது புது தொழில்நுட்பம் உருவாகியிருக்கிறது. திரைப்படங்கள் சி.டியில் பதிவாக்கப்பட்டு இசை, திரைப்படம் எல்லாவற்றையும் ஒன்றாகப் பார்க்கும் முறையாகும். (இப்பொழுது தமிழ்த் திரைப்படங்கள் சி.டிக்களில் வெளியாகிறது) ஒரு திரைப்படத்தை பல சி.டிக்களில் பதியவேண்டிய நிலை இருந்தது. ஆனால் இந்தத் தொழில் நுட்பம் தற்போது பழையதாகிவிட்டது. இப்போது அறிமுகமாகியிருக்கிறது DVD-5 என்னும் தொழில் நுட்பம். இதன் மூலம் ஒரு திரைப்படத்தை ஒரே சி.டியிலேயே பதிந்து விடலாம். சி.டியைப்போட்டால் திரைப்படம் மிகமிகத் தெளிவாக இருக்கும். இந்த சி.டியின் கொள்ளளவு 4.6 GB. சாதாரண C.D ROM –ன் அளவு 650 MB அளவேயாகும். இவருடைய நிறுவனம் இந்த புதிய தொழில்நுட்பத்தின் மூலம் வெளியிட்ட முதல் சி.டி மடோனா நடித்த "EVITA" என்ற திரைப்படமாகும். இத் தொழில் நுட்பம் மூலம் படம் பார்க்கும் போது திரைப்படமாளிகையே வீட்டில் இருப்பது போன்ற உணர்வு இருக்கும். இப்படிப்பட்ட DVD-5 என்னும் முறை சினிமாவிற்கு மிகப் பெரும் எதிரியாக வரும் என்பது பிறதறெக்சனின் கருத்து.




மேலும் இதிலுள்ள ஆச்சரியமான விடயம் என்னவென்றால் ஒரு திரைப்படத்தை நாமே எட்டு மொழிகளில் மொழி மாற்றம் செய்யலாம். 32 மொழிகளில் கீழே வரும் வசனங்களை மாற்றலாம். (தமிழ்மொழி இதுவரை சேர்த்துக் கொள்ளப்படவில்லை). ஐரோப்பாவிலேயே DVD உற்பத்தியில் முழு தானியங்கி தொழில்நுட்பத்தைக் கொண்ட தொழிற்சாலை இவரதுவே. இவரது ரெக்னோ நிறுவனம் இந்த ஆண்டில் இதுவரை 3 இலட்சம் DVD வீடியோ இசைத்தட்டுகளைத் தயாரித்துள்ளன. இதுவே ஐரோப்பிய ரீதியிலான உற்பத்தியில் 50 வீதமானதாகும். எதிர்வரும் நத்தார் வரை சுமார் ஆயிரம் திரைப்படங்களை சி.டி யில் தயாரிக்கவிருக்கிறார் அலெக்ஸ். இவர் இத்துடன் நின்றுவிடப் போவதில்லை அடுத்த புதிய தொழில்நுட்பமான 6 அலைவரிசையில் வரவுள்ள இசைத்தட்டு வெளியீட்டிற்கும் இப்பொழுதே தயாராகி வருகிறார். "உலகம் மாறுகிறது அதற்கேற்ப நாமும் நம்மை மாற்றிக் கொள்ளாவிட்டால் தூக்கி வீசப் படுவோம்". எனது தந்தையின் வாழ்வு எனக்கு அரியதோர் பாடமென்கிறார் பிறதறெக்சன். ■



படிப்பகம்

www.padippakam.com

# Woodlands C@ll

## NCI CARTES NCI

மீண்டும் உங்கள் திருப்திக்காக

**தொலைபேசி அட்டை வெளியாகிவிட்டது**

இன்று பல நாடுகளுக்கும் **மிகக்குறைந்த விலையில்** அதிக நிமிடத்துடன் தெளிவான தொனிவுடன் உரையாடுவதற்கு




பாரிசில் முன்னணி தொலைபேசி அட்டையான **Woodlands C@ll** வாங்கி ஓர்முறை பேசிப்பாருங்கள்.

## WOODLands C@ll

எப்போதும் மலிவான விலையில்




மிக விரைவில் லண்டன், ஜேர்மனி, சுவிஸ், டென்மார்க், இத்தாலி, இலங்கை, இந்தியா இன்னும் பல நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு - வூட்லன்ஸ் உணவகம்

207, Rue Fg.St.Denis, 75010 Paris

Tel :01 40 37 08 20 / Fax :01 40 37 28 20

www.padippakam.com

# GLOBAL TAMIL VISION







திரையுலகின் புதிய வரவு
திரையுலகின் புதியதோர் உதயம் ORENTAL
திரையுலகின் புதியதோர் நிறுவனம் வெளியீட்டில்




தெலுங்கு,
தமிழ்,
மலையாள பாடல்கள் அடங்கிய
CD க்கள் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

## ORIENTAL

CD க்கள் AUDIO க்களுக்கு ஏக விநியோகஸ்தர்கள்

வர்த்தக ரீதியான தொடர்புகளுக்கு: G.T.V
Tel: 01 42 09 02 57 - Fax - 01 42 09 06 38

G.T.V